3 | 1 - 6 - 54 | இதழ்

66



'பச்சையப்பன்' தந்த மாணிக்கம் !

அறிஞர் அண்ணா அவர்கள், பச்சையப்பன் அறநிலையத்தைச் சார்ந்த கல்விச்சாலையைத் தவிர, பிறிதொரு கல்விச்சாலையில் பயின்றாரில்லை. அறிஞர் அண்ணா காஞ்சியிலுள்ள பச்சையப்பன் ஆரம்பப் பள்ளியால் எடுக்கப்பட்டுக் காஞ்சிப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியால் வளர்க்கப்பட்டுச், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியால் சிறப்பிக்கப்பட்டவராவார். "அறிஞர் அண்ணா, நான் தந்த மாணிக்கமே!" என்று சொல்லிக்கொள்ளும் முழு உரிமை 'பச்சையப்பன் சாலை'க்கே உரியதாகும்!

சங்கரன்
முன்னேற்றப் பயிற்சிக் கல்லூரி

[Sankaran Progressive Tutorials]

கருணாநிதிப் பூங்கா, தெப்பக்குளம் அஞ்சல், திருச்சி.

கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, பொறியியல் தேர்வுக்கான பாடங்கள் பயிற்றுவிக்கப்படும்

1954 ஜூன் திங்கள் 6-ம் நாள் முதல் துவக்கம்

கல்லூரித் தலைவர் : **திரு என். ஜே. தேவதாஸ் எம். ஏ.**
[பயிற்சி கொடுப்பதில் புகழ்பெற்ற பேரறிஞர்]

துணைத்தலைவர் : **திருமதி ஜூடியத் ஜாயி எம். ஏ.**
[கோவைக் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராய் இருந்து பெயர் பெற்றவர்]

அறிவும் ஆற்றலும் பெயரும் புகழும் பெற்ற விரிவுரையாளர்கள் பலர் பணியாற்றுகின்றனர்.

அலுவலகம் :
கிளைவ் தெரு,
தெப்பக்குளம் அஞ்சல்,
திருச்சி.

ஐ. டி. நாதன் எம். ஏ.
செயலாளர்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1 - 6 - 54 செவ்வாய்க்கிழமை

காரிருள் நீங்கிற்று

காரிருள் நீங்கிற்று! நாட்டு மக்களைப் பயமுறுத்திய கல்வித்திட்டம் மறைந்தது! வெற்றி உதயமாகியது!

கொடுமை ஒழிந்தது! குலத்தொழில் கல்வி முறை அழிந்தது! குதூகலம் பிறந்தது! மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி கூத்தாடுகிறது!

அறப்போர் வென்றது? ஆச்சாரியாரின் வர்ணாச்சிரமத் திட்டம் தோற்றது!

வெற்றி விழா! உரிமை வீரர் கொண்டாடும் திருவிழா! தமிழகமெங்கும் பூரிப்புடன் கொண்டாடும் நல்ல விழா! பெற்ற தாய் பெருமையுற, பிறந்த பொன்னாடு மகிழ்வுற, ஆன்றோர் ஆசி கூறிட, சான்றோர் வாழ்த்துகள் வழங்கிட, வெற்றிப் பண்ணிசைத்து, வீரர்தம் கூட்டம் பவனிவரும் நன்னாள்! எடுத்த போராட்டத்தில் கிடைத்த வெற்றி கண்டு, கழகம் மகிழ்வுறும் நன்னாள்! தான் பெற்றெடுத்த பிள்ளை இனிப்புப் பண்டம் தின்று, புன்சிரிப்புடன் ஓடிவருவதைக் கண்டு, "வாடா! என் மகனே! உன் வாழ்வைக் கெடுக்க இருந்த சதித்திட்டம் ஒழிந்ததடா, கண்ணே!" என்று, அவனை வாரியணைத்து, உச்சிமோந்து தமிழகத்திலுள்ள ஒவ்வொரு தாயும் மனமகிழவேண்டிய பொன்னாள்!

வர்ணாச்சிரமத் திட்டம்—இந்த நாட்டை ஆரியத்துக்கு அடிமைப்படுத்த ஐம்பதாண்டு காலமாய் ஆச்சாரியார் கட்டி வந்த மனக்கோட்டை இடிந்துவிட்டது! அடக்குமுறையால் மக்களின் மனப்போக்கை அடக்கநினைத்த எதேச்சாதிகாரம் வீழ்ந்துபட்டது! அந்த நற்செய்தி கேட்டு தமிழகம் முழுவதும், ஒரு வாரத்துக்குமுன் விழாக் கோலத்தில் ஈடுபட்டது. அந்த விழா தந்த மகிழ்ச்சியில் நாமும் கலந்துகொள்ளுகிறோம்.

புதிய கல்வித்திட்டத்தை ஆச்சாரியார் கொண்டுவந்தபொழுது, அரசியல் கட்சிகளிடமிருந்தும், ஆசிரியர் குழுவிலிருந்தும், கல்வி நிபுணர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், கண்டனம் கிளம்பியது. எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் ஏற்றுக்கொள்வதில்லையென்ற ஆணவத்துடன், ஆச்சாரியார் தனது திட்டத்தைப் புகுத்துவதில், முனைந்தார். மற்ற வழிகள் பலன்தராதது கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், நேரடிப் போராட்டத்தில் இறங்கியது!

அடக்கு முறையை அள்ளி வீசினார், ஆச்சாரியார்; கழகம் அதனை ஏற்றுக்கொண்டது! துப்பாக்கிக் குண்டுகளையும், தடியடிப் பிரயோகங்களையும், அடக்குமுறைகளையும், சிறைத் தண்டனைகளையும், அறப்போர் வீரர்கள் ஏற்றுக்கொண்டனர்!

நிலைகெட்ட ஆச்சாரியார் பதவிவிட்டோடினார், அவருடைய கல்வித்திட்டம் கைவிடப்பட்டது! அவருடைய பிரதம சீடரான கனம் சுப்பிரமணியமே, செத்த பிணத்தைப் புதைகுழிக்கு, கடைசி அழுகையுடன் அனுப்பி வைத்தார்!

ஜனநாயக முறைப்படி பார்த்தால், அது சென்ற ஆண்டு, 30 - 7 - 53-ல் சட்டசபையில் நடந்த விவாதத்தின் பின் ஓட்டெடுப்பில் அரசாங்கம் தோற்றுப்போனபொழுதே செத்துவிட்டது! பெற்றெடுத்த குழந்தை செத்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்ள ஆச்சாரியார் மறுத்தார்; பட்டாடையைப் போர்த்து, சந்தனத் தைலத்தைத் தெளித்துப் பாதுகாத்து வந்தார். ஆனால் செத்த பிணத்தின் துர்நாற்றம் வீசியது. அதை அவரைச் சேர்ந்தவர்களாலேயே சகித்துக்கொள்ள முடியவில்லை. கடைசியாக ஆச்சாரியார் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். புதுக் குடித்தனம் வந்தவர், அந்தப் பிணத்தை முதலில் புதைப்பதற்கு ஏற்பாடு செய்தார். வீட்டில் கணக்கு வேலை பார்த்தவர்—அவர் பழைய வீட்டுக்காரர் ஆச்சாரியாரிடம் வேலை பார்த்தவர், புதிய குடித்தனக்காரரிடமும் கணக்குப் பிள்ளையாக இருப்பவர்—அவர் செத்த பிணத்தை வெளியேற்றி, புதைகுழிக்கு அனுப்பும் வேலை

யில் முதன்மையாக நின்றார், பிணத்தை அனுப்பும்பொழுது, கலங்கித்தான் போயிருந்தார், இருட்டில் தடுமாறுபவர்போலத்தான் நடமாடினார், பேச்சிலே சோகம் இருந்தது, கண்களில் நீர் வழிந்தது. குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பு அவரிடம் இருந்தது. இப்பொழுது புதைகுழியில் தள்ளி மண்ணை மூடவேண்டிய வேலை அவருக்குத் தரப்பட்டிருக்கிறது. அவருடைய வேலை மிகப் பரிதாபமானது!

ஆனால் அதைவிட மிகப் பரிதாபமாகத்தான் இருந்திருக்கும், அவர் முன்னிருந்த முதலாளியிடம் செய்தியைச் சொல்லச் சென்றபொழுது! முன்பிருந்த மாளிகையைவிட்டு, அந்த மகானுபாவர் இப்பொழுது ஒரு சிறு வீட்டில் பெரிய எழுத்துப் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருக்கிறார். அவர் விட்டு வந்த மாளிகையைப் பற்றி, அவருக்கு அடிக்கடி கவனம் வராமலில்லை! ஆனாலும் மாளிகையில் பின்தங்கி, முக்கியவேலை பார்க்கும் கனம் கணக்குப்பிள்ளையிடம் அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது.

அயோத்தி நகரைவிட்டு, அரச பதவியை விட்டு, அரண்மனை வாழ்வைத் துறந்து, ஆரண்யத்தில் குடிபுகுந்துள்ள இராமச்சந்திர பிரபு அருமை மனைவியாம் சீதாபிராட்டியைப் பிரிந்த துக்கத்தால் மிகச் சோகத்துடன் உருகுகிறார். அவருடன் கூட இருக்கும் மற்ற வானரங்களால் ஆறுதல் ஏதும் அளிக்க முடியவில்லை. கடைசியாக அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான அனுமானே வருகிறான் வாலை சுழற்றிக் குதித்துக்கொண்டு, களிப்புக் கூத்தாட, "கண்டேன், கண்டேன்!" என்ற குரலுடன். சுந்தரகாண்டத்தில் மிகப் பவ்வியமான கட்டம் அது!

நமது ஆச்சாரியாருடைய கதையில் வருகிற சுந்தரகாண்டம் மிகப் பரிதாபமான கட்டத்தை அடைந்திருக்கிறது. அரண்மனை வாழ்வை விட்டு, அரசபோகத்தைவிட்டு, அவர் ஆரண்யவாசத்தில் இருக்கிறார். இலங்காபுரி சென்ற அவருடைய அனுமான் திரும்பி வருகிறான், முகத்தில் சோகம் கப்பியிருக்கிறது, வழக்கமாக இருக்கும் அசட்டுப் புன்சிரிப்பைக் கூட காணோம்.

"வாயு குமாரனே! வானரர் தலைவனே! கண்டனையா என் கண்மணி சீதாபிராட்டியை, என்னைவிட்டுப் பிரிந்த இளவரசியை?"

அனுமான் சோகத்துடன் தலைகுனிந்து நிற்கிறான், அவனுடைய உப்பிய கன்னங்கள் மீது கண்ணீர் வழிகிறது.

"ஏன் இந்தச் சோகம்! நடந்ததைக் கூறும்! தென்றிசை சென்றாயே, வெற்றித் திருமகளைக் காணமுடியவில்லையா? ஒற்றர்களில் தலைசிறந்தவனாயிற்றே நீ! உன்னாலுமா கண்டுபிடிக்க முடியவில்லை!"

"கண்டேன், பிரபு! கண்டேன்!" என்று தழதழத்த குரலில் அனுமான் பதிலளிக்கிறான்.

"அப்படிச் சொல், அஞ்சனை புத்திரனே! என் தேவியைக் கண்டாயா! எங்கே, எப்படி? சீக்கிரமே பதில் சொல்!"

"இலங்காபுரியில், அசோகவனத்தில், அரக்கர்களால் சிறைவைக்கப்பட்டு."

"அசோகவனத்திலா, அரக்கர் மத்தியிலா? ஐயோ! நீ என்ன பாடுபடுகிறாயோ? உன் அருமை பெருமைகளைப் பற்றி யாருக்குத் தெரியும்?"

சீதாபிராட்டியின் அங்க அடையாளங்கள் பற்றி அனுமானுக்குத் தெரியுமேயன்றி அவருடைய மற்ற அருமை பெருமைகள் தெரியாது.

சக்ரவர்த்தித் தோன்றல் அதை வெளியிடுகிறார். "கங்கை நதி தீரத்தில் பிறந்தவள், மிதிலாபுரியில் தவழ்ந்தவள், ராஜரிஷியால் பாதுகாக்கப்பட்டவள், ஆரிய தர்மத்தின்படி வளர்ந்தவள்! அவளைப் பிரிந்தேன், என் வாழ்க்கைத் திட்டம் மங்கிவிட்டது! அரக்கர் கையில் விட்டுவிட்டேன். அனுமானே! அவள் அழகு மங்கையாயிற்றே, அதிரூப சுந்தரியாயிற்றே! அரக்கர்களால் அவளுக்கு ஆபத்து......"

"ஒன்றும் நிகழவில்லை, பிரபு! காரணம் அவளை அரக்கர்கள் வெறுக்கிறார்கள், அவலட்சணமெனத் தூற்றுகிறார்கள்!"

"என்ன, அவலட்சணமா! வேடிக்கையாயிருக்கிறதே, அவள் பெயரே ஸ்ரீதேவி, அழகின் தெய்வம்! ஆரிய வர்த்தத்தில் அவளுக்கு இணையானவர் கிடையாதே! சதுர்மறைகளும் அவள் அழகுக்குச் சாட்சி கூறுமே!"

"பிரபுவே! ஆரிய கலாச்சாரப்படி எதைப் போற்றி வைக்கிறீர்களோ, அதைத்தான் அவர்கள் வெறுக்கிறார்கள். விரட்டியடிக்கிறார்கள்!"

"அப்படியானுல் சீதேவியை அழைத்துவந்திருக்கலாமே!"

"வந்திருக்கலாம், ஆனுல்..."

"ஆனுல், என்ன ?"

"அதற்குள் சீதாபிராட்டியாருக்குக் கடு நோய் வந்து......"

"இறந்துவிட்டாளா ?"

"இல்லை, குற்றுயிரும் குலையுயிருமாய் இருக்கும்பொழுது"

"பின் ?"

"இனிப் பயனில்லை என்று புதைக்கப்பட்டுவிட்டது."

"உயிர் ஊசலாடும் பொழுதே புதைத்துவிட்டார்களா! ஐயோ! என் உயிர் போகிறதே, வாழ்வு மங்குகிறதே! திட்டம் சரிகிறதே! அந்தப் படுபாவிகளைச் சும்மா விடப்போவதில்லை. இலங்காதிபனையும், அவன் அரக்கர் கூட்டத்தையும் நன்ருகத் தண்டிப்பேன், இக் கோதண்டத்தின் துணைகொண்டு. அவளைப் புதைகுழியில் தள்ளியது யார் ?"

"பிரபு, அந்த அரக்கர்கள் கொஞ்சமும் இரக்கமற்றவர்கள். என்னை விட்டுப் புதைகுழி தோண்டச் சொன்னுர்கள், தள்ளி மூடச் சொன்னுர்கள்."

"அடபாவி!"

"வேறு வழியில்லை; மண்ணைப்போட்டு மூடி, மந்திரங்களை செபித்துவிட்டு, வந்தேன்."

"உன்னைத் தூதனுப்பினேன் பிராட்டியைக் கண்டுபிடித்துவரும்படி, நீ கல்லறையில் அவளை தள்ளிவிட்டு வந்திருக்கிருய்! இலங்காபுரியை உன் வால் நுனித் தீயால் சுட்டுவிட்டு வருவாய் என்று எதிர்பார்த்தேன். நீயோ வாலைப் புண்ணுக்கிக்கொண்டு, முகத்தில் கரிபூசிக் கொண்டு வந்து நிற்கிருய், போ! என் சோகத்தை அதிகமாக்காதே."

இந்த சுந்தரகாண்டப் படலம், சக்ரவர்த்தி திருக்குமாரன் இராமபிரானைப் பற்றி கம்பர் எழுதிய இராமாயணத்தில் கிடையாது. ஆனுல் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரைப் பற்றி யாராவது ஒரு கம்பநாட்டாழ்வார் காதை ஒன்று எழுதினுல், அதில் இத்தகைய படலம் ஒன்று வரத்தான் செய்யும்.

ஆட்சிப் பதவியை விட்டு ஆச்சாரியார் சென்ருர்; அவர் விட்டுப் பிரிந்ததும், அவருடைய கல்வித்திட்டத்துக்குப் புதைகுழி தோண்டப்பட்டு, ஆழப் புதைக்கப்பட்டுவிட்டது. அந்தக் கைங்கரியத்தை, அவருடைய பக்தர் கனம் சுப்பிரமணியமே நடத்திவைத்திருக்கிருர்.

மமதையுடன் நிறுவப்பட்ட திட்டம் மண்மேடாகிவிட்டது, அதிகாரவெறியுடன் நுழைக்கப்பட்ட திட்டம் அழிக்கப்பட்டது. சூழ்ச்சி தோற்றது, நீதி வென்றது.

ஆச்சாரியார் தோற்ருர், நமது கழகம் வென்றது.

ஆச்சாரியார் ஒருமுறையல்ல, இருமுறை நம்மிடம் தோற்றிருக்கிருர். முன்பு கட்டாய இந்தியைப் புகுத்தி தோற்ருர், இப்பொழுது வர்ணுச்சிரமத் திட்டத்தைப் புகுத்தி தோல்வியுற்ருர்.

திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த முயற்சியில்—தொடுத்த போரில் வெற்றி பெற்றது. பெருமிதமும், மகிழ்ச்சியுமடைகிருேம்.

வெற்றி எட்டுதிக்குமெட்ட முரசுகொட்டுகிருேம், வீணரின் சூழ்ச்சி வீழ்ந்ததென முரசு கொட்டுகிருேம்.

வெற்றி மகிழ்ச்சியில், இந்த வெற்றிப் பாதையை அமைத்திட்ட வீரர்களை தொல்லைகளைத் துச்சமென மதித்து செயலாற்றிய தீரர்களை வாழ்த்துகிருேம், பாராட்டுகிருேம். போராட்டத்தில் உயிர் துறந்த ஆறு மாவீரர்களுக்கு நமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம். அவர்கள் காட்டிய உறுதி, கொட்டிய ரத்தம்தான் வெற்றியைக் கொணர்ந்தது.

காரிருள் நீங்கிற்று, கதிரவனொளி வீசுகிறது, காலையம்பொழுதிலே இன்பத் திராவிடத்தின் இதய கீதம் எங்கும் நிறைநாதமாகிவிட்டது.

வாழ்க வீரர்கள்!

வளர்க அவர்தம் வெற்றி !!

கருத்துக் கதிர்

பணத்தைப் பாழாக்கும் பணி

இந்திய அரசாங்கம் பணத்தைப் பாழாக்கும் பணியை எவ்வளவு ஆடம்பரத் தன்மையில் செய்துவருகிறது என்பதற்கு, இந்திய மக்கள்சபை மதிப்பீடு குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றே போதிய சான்றாகும். அந்த அறிக்கை கூறுவதாவது:

"சர்வதேச பாங்கி கடன் கொடுத்தவுடன் அமெரிக்காவில் 180 டிராக்டர்கள் வாங்கப் பட்டன. அவற்றின் இயக்கத் திறன் பற்றியோ, இந்திய சூழ்நிலையில் வேலை செய்யுமா என்றோ ஆராய முயற்சிகூட செய்யப் படவில்லை. டிராக்டர்கள் பற்றி ஏதும் அறிந்துகொள்ளாமலும், தொழில் நுணுக்க அனுபவமில்லாமலும் ரூ. 95,73,000-ஐ கொடுத்து வாங்கி, அவற்றை இயக்க அதிகம் செலவாகிறது. அடிக்கடி பழுதுபார்த்துச் சரிப்படுத்தவேண்டியிருப்பதோடு, கருவிகளும், பாகங்களும் பொருந்துபவையாகக் கிடைக்காமல், டிராக்டர்களைச் சும்மா நிறுத்திவைக்கவேண்டியதாயிற்று." என்பதாகும்.

பொதுமக்களின் வரிப்பணம் சுமார் ரூ. 1 கோடி அளவுக்கு இந்தவகையில் மட்டும் வீணாக்கப்பட்டிருக்கிறது என்றால், ஏழை இந்தியத் துணைக்கண்டம் எத்தனை நாட்களுக்கு இத்தகைய விரயங்களைத் தாங்கிக்கொள்ள முடியும்? ஐயோ, திராவிடமே நீயும் இத்தகைய விரயங்களில் சிக்கிச் சீரழிய வேண்டுமா? உனக்கு என்று விடுதலை கிட்டுமோ?

∴ ∴ ∴

'உயர்வகுப்புக்கு' ஏற்ற எடுத்துக்காட்டு

அரசாங்க அலுவல்களில் 100-க்கு 100, 100-க்கு 90, 100-க்கு 80 என்ற விகிதப்படி ஒவ்வொரு துறையிலும் 'உயர்' வகுப்பினர் வேலைபார்த்து வருகின்றனர். அந்த 'உயர்' வகுப்பினரின் பண்பு, பழக்கவழக்கம், கொள்கை கோட்பாடுகள் எல்லாம் ஏறத்தாழ அவர்கள் எல்லோரிடமும் ஒரே தன்மையாக அமைந்திருக்கும். அவர்களிலே ஒருவர்தான் எஸ். ஏ. வெங்கட்டராமன் ஐ. ஸி. எஸ்.

அந்த எஸ். ஏ. வெங்கட்டராமன் மீது இலஞ்ச ஊழல் வழக்கு ஒன்று நடைபெற்று வருகிறது. அந்த வழக்கில், திரு எஸ். ஏ. வெங்கட்டராமன் மீது குற்றப்பத்திரிக்கை வாசித்த தனி நீதிபதி கபூர், கீழ்க்கண்டவாறு லஞ்சம் வாங்கிய பொருள்களின் ஜாபிதாவைக் கொடுத்துள்ளார்.

அது வருமாறு:—"பம்பாயிலுள்ள மில்லர்ஸ் டிம்பர் டிரேடிங் கம்பெனி, சுந்தர் தாஸ் ரம்பமில் முதலிய கம்பெனிகளிடமிருந்து விஸ்கி, மதுபானங்கள், மூக்குக் கண்ணாடிகள், உடுப்புகள், சிகரெட்டுகள், மரச்சாமான்கள், வெனீஷியன் ப்ளைண்டுகள், பாத்திரங்கள், கடிகாரச் சங்கிலி, பவுண்டன்பேனா, கடிகாரம், ஸூட்கேஸ், ஸ்பிரிங் மாட்ரஸ், பழம், காய்கறி பார்சல்கள், விமானப் பிரயாண டிக்கெட்டுகள் மற்றும் இதர சில்லரைச் சாமான்கள் முதலியவற்றை எதிரி இனாமாகப் பெற்றார்" என்பதாகும்.

தோழர் எஸ். ஏ. வெங்கட்டராமனை உயர் வகுப்புக்கு ஏற்றச் சிறந்த எடுத்துக்காட்டாக வைத்துப் புகழ்ந்தவர்களும் உண்டு!

∴ ∴ ∴

பணம் முடங்கும் இடம்

பணம் முதலாளித்வ மூர்க்கர்களிடத்திலே மட்டுமன்று ஆண்டவர்களின் கோயில்களிலும் முடங்குகிறது என்பதை நாம் சுட்டிக்காட்டும் போதெல்லாம் நம்மை எதிர்த்து நிற்க, கச்சை வரிந்து கட்டிக்கொண்டு பலர் வருகிறார்கள். இவ்வாண்டு மார்ச் திங்களில் மட்டும் திருமலை—திருப்பதி தேவஸ்தானத்துக்குப் பக்தர்களின் காணிக்கை வழியாகக் கிடைத்த வருமானம் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டுள்ளபடி வருமாறு:—(1) திருமலையிலுள்ள வெங்கடேஸ்வர சுவாமி கோயில் ரூ. 1,42,295—15—3. (2) பத்மாவதி கோயில், திருச்சானூர் ரூ. 325—0—5. (3) திருப்பதி கோவிந்தராஜசுவாமி கோயில் ரூ. 2725-12-0. (4) திருப்பதி கோதண்டராமசுவாமி கோயில்

ரூ. 226—1—9. (5) திருப்பதி கபிலேஸ்வர சுவாமி கோயில் ரூ. 220—0—0.

இவ்வளவு பணம் வேண்டுதல் வேண்டாமை இலானாகிய ஆண்டவனுக்குக் குவிகிறது! காணிக்கை செலுத்திய மக்கள் கண்ட பலன்—கண்டுகொண்டிருக்கும் பலன் பஞ்சம்-பசி-பட்டினி-வறுமை-ஏழ்மை!

ஃ ஃ ஃ

இவருக்கு அவர் பதில் தருகிறார்

காலம் மாற மாற சமூக அமைப்பும் மாறுகிறது; அது தவறு; முன்னோர்கள் வாழ்ந்த முறைப்படி வாழ்ந்து, இந்து தர்மத்தை அப்படியே கடைப்பிடிக்கவேண்டும்; அப்பொழுது தான் வாழ்க்கை பயன்படுவதாக அமையும் என்று அன்பர் இராசகோபாலாச்சாரியார் அடிக்கடி கூறிவருகிறார்.

ஆச்சாரியாருக்கு, அவர் இணைந்துள்ள காங்கிரஸின் தலைவரும், அவருக்கு நெருங்கிய நண்பருமான பண்டிதர் நேரு அவர்களை விட்டே பதில் சொல்லச் சொல்லுவது நல்லதல்லவா! பண்டித நேரு, இந்தியப் பாராளுமன்றத்தில், விசேஷ விவாக மசோதா வாதிக்கப்படும்பொழுது, குறுக்கிட்டுப் பேசும்போது, "காலம் மாறிக்கொண்டே வருவதால், சமூகமும் மாறவேண்டும். நம் தாய் தந்தையர், தாத்தா பாட்டியர் காலம் வேறு; நம் காலம் வேறு. ஆகவே சமூகம் பிழைத்து நிற்கவேண்டுமானால் சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றித்தானாக வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். பண்டித நேருவின் இந்தக் கூற்றை ஆச்சாரியாருக்குக் காணிக்கையாக வைக்கிறோம். 'இவரு'க்கு 'அவர்' பதில் ஏறுமா என்று பார்ப்போம்!

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநாடுகள்

வேலூர் கோட்டைவெளியில் நடைபெறும்

19-6-54 சனி	20-6-54 ஞாயிறு
சமூக மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: ஈழத்து அடிகள் பி. ஏ.	தலைவர்: கே. ஏ. மதியழகன் பி. ஏ.
துவக்குபவர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.	துவக்குபவர்: கி. மனோகரன்

ஓவியக் கண்காட்சி திறப்பாளர்: என். எஸ். கிருஷ்ணன்

இரண்டு நாட்களிலும் எஸ் எஸ் இராஜேந்திரன் குழுவினர் நடிக்கும்

அம்மையப்பன் — சந்திரமோகன்

நாடகங்கள் நடைபெறும்

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணாவும்,

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொள்வர்.

வ. கு. தலைவர்கள்	செயலாளர்கள்	பொருளாளர்
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி	வி. ஆர். ஆதிமூலம்	வி. எஸ். அரங்கநாதன்
எம். பி. சாரதி எம் சி.	கே. சுப்பிரமணியம்	
தொ. ப. தலைவர்கள்	விளம்பர உறுப்பினர்	அலுவலகப்பொறுப்பாளர்
அ. கருத்தோவியன்	சிவானந்தம்	இராதாகிருஷ்ணன்.
எஸ். குப்புசாமி		

72

'சொர்க்கவாசல்'

பரிமளம் பிக்சர்சாரின் "சொர்க்கவாசல்" கடைசியாக மே 28-ந் தேதி முதல் தமிழக மெங்கும் திரையிடப்பட்டுள்ளது. மிக நீண்ட காலத் தயாரிப்பு, நெருக்கடிகள், தொல்லைகள், கடைசியாக சென்சாரின் கண்காணிப்பு இவைகளைத் தாங்கிக்கொண்டு, 'சொர்க்கவாசல்' வெளிவந்திருக்கிறது, கார்முகிலைக் கிழித்தெழும் முழுமதிபோல, காலையிருளை அழித்து வரும் கதிரோன்போல. காத்திருந்தது வீண் போகவில்லை, அரியதொரு படம் மக்களுக்குக் களிப்பூட்டுகிறது.

கண்ணையும், கருத்தையும் கவரும் விதத்தில், சிந்தையும், செவியும் மகிழும் வகையில், எழில் ஓவியமாக, இசையமுதாகப் படம் வெளிவந்திருக்கிறது.

தமிழகத்தில் புதியதொரு எழுச்சியை, தமிழிலக்கியத்தில், மாற்றார் கண்டு மருளும் வகையில் புதியதொரு மறுமலர்ச்சியை உண்டாக்கிய எழுத்தின் மன்னர் அறிஞர் அண்ணா எழுதிய கதை. ஆற்றொழுக்கு போன்று ஒன்றையொன்று அடுத்து வரும் காட்சிகள்-கருத்துக்கள் மணக்க, கன்னித்தமிழ் மணக்க, காதல் மணக்க, இசை மணக்க, வீரம் மணக்க, வெற்றித்திறம் மணக்க இந்தக் கதை வளர்கிறது.

கலை யாருக்காக? எதற்காக? என்ற பெரிய கேள்விக்கு விடைகாணும் கதை இது. மடாலயத்தின் சூதுத் திட்டத்துக்குத் துணைபோன இசைத்திறமை, மன்னனின் ஆஸ்தான மண்டபத்தை அணிசெய்த கவிதா சக்தி, மக்களின் பக்கம் சேர்ந்த கதை.

பலதிறப்பட்ட காட்சிகளும், சம்பவங்களும், சொற்சுவைகளும், பொருட்சுவைகளும் நிரம்பியிருக்கின்றன. சிற்றாரில், சிங்காரமலர்த் தோட்டத்தில் மதிவாணனும் அவன் தங்கை திலகாவும் இருப்பதைப் பார்க்கிறோம். கன்னித் தமிழ்ச் சாலையோரத்தே கவிதைக் கனியுண்ணும் பறவை பறந்து செல்வதைப் பார்க்கிறோம். அந்தப் பறவை, மடாலயத்தின் சூழ்ச்சிக் கூண்டில் சிக்குகிறது, மன்னன் காட்டிய தங்கக் கூண்டில் செல்கிறது. கிளி தூது செல்கிறது, அங்கு காதல் கொள்கிறது. எங்கும் இன்பமயம்தான்.

ஆனால் தென்றல் மாறுகிறது, புயல் வீசுகிறது. மடமை நெறியிலே, மடாலய பக்தியிலே, அரண்மனை வாழ்விலே, ஆஸ்தான மண்டபத்திலே அடைபட்டுக்கிடந்த கவிவாணன், வெளி வருகிறான் உண்மை நெறி நோக்கி, காட்டுக்கு, ஏழையர் நாட்டுக்கு. மன்னன் வீசும் தடைகளை மீறுகிறான், மதத்தலைவர்கள் தரும் கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளுகிறான். கடைசியில் வெற்றிக்கொடி உயர்த்துகிறான் மக்களின் கவியாக.

தோழர் கே. ஆர். ராமசாமி மதிவாணனாகத் தோன்றுகிறார். நடிப்பின் புலவராக மட்டுமல்ல, இசையின் புலவராக—இன்பத்தேனூறும் தமிழிசையின் புலவராகவும் அவர் இருக்கிறார். அவர் இப்படத்தில் பாடிய ஒவ்வொரு பாட்டும், நெஞ்சை யள்ளுவதாக இருக்கிறது, இசைவெள்ளத்தில், இன்பகீதத்தில் ஆழ்ந்து விடுகிறோம் கேட்ட பாட்டுக்களை மறக்கமுடியவில்லை—இதயத்தில் ரீங்காரம் செய்தபடி இருக்கின்றன. பாட்டுடன் போட்டியிடுவதாக இருக்கிறது, அவருடைய பேச்சும், நடிப்பும். தங்கையுடன் மலர்த்தோட்டத்தில், குமாரியுடன் காதற் கட்டத்தில், மதத்தலைவருடன் மடாலயத்தில், மரகத மணியுடன் விளையாட்டுப் பேச்சில், வெடித்த எரிமலையென அரசவையில் கனல்கக்கிடும் வீர முழக்கத்தில், எங்கே சொர்க்கமென நாட்டு மக்களை அழைத்திடும் பாடலில், தங்கையை இழந்து தவித்திடும் சோகத்தில், தரணியாள்பவனின்மீது பழிதீர்க்க வரும் கட்டத்தில், ஒவ்வொரு இடத்திலும் தோழர் ராமசாமி நடிப்பால் உயர்ந்து விளங்குகிறார்.

தங்கை திலகாவாக நடிக்கும் அஞ்சலி தனது பாகத்தைத் திறம்படச் செய்திருக்கிறார்கள். சிறையில் கும்மிப்பாட்டு, பின் காட்டில் பைத்தியக்காரப்பாட்டு இவைகளில் அவருடைய நடிப்பு அபாரமாகும்.

குமாரதேவியாக வரும் பத்மினி ஒரு "அரசாளும் ஆரணங்குக்குரிய முறையில்," தோற்றத்திலும், நடிப்பிலும் சிறந்து விளங்குகிறார்கள். காதற் பரிசு வழங்கும் கட்டத்திலும், மந்திரி—படைத்தலைவர்களுடன் வாதிடுவதிலும், முடிதுறப்பின்போதும், பேச்சும் நடிப்பும் உயர்ந்துள்ளன.

வெற்றி வீரனுகக் காட்சியளிக்கும் வீரப்பா, முதலிலிருந்து கடைசிவரை, ஒவ்வொரு கட்டத்திலும், சிறிதுகூட அப்பழுக்கு தோன்றுமல், திறம்பட நடித்துள்ளார். வீரநடையும், கம்பீரப் பார்வையும், கடுமையான பேச்சும், கேலிச் சிரிப்பும், வெற்றிவீரனுக வரும் வீரப்பாவுக்கு நல்ல வெற்றியைத் தந்துள்ளன.

முத்து மாணிக்கமாக வரும் ராஜேந்திரன் மிகக் கஷ்டமான பாகமொன்றை ஏற்றுத் திறம்பட நடித்துள்ளார். திலகாவைப் பிரிந்து வாடிடும் சோகக் கட்டங்களில், அவரது பேச்சும், நடிப்பும் நெஞ்சை நெகிழவைப்பதாக உள்ளன.

புலவராக வரும் வெங்கிடாசலம் உண்மையில் அகமும், புறமும் பாடிய அருந்தமிழ்ப் புலவர் மரபில் வந்தவர் போலத்தான் தோன்றுகிறார். இனிய தமிழ் அவர் பேச்சில் கமழ்கிறது.

மந்திரிப் பதவி ஏற்ற நடிகமணி நாராயணசாமி, ஒரு மதியூக மந்திரிக்குரிய பண்புடன் உரையாடுவதும், ஆலோசனைகள் தருவதும் நன்றாக அமைந்துள்ளன.

அருள்மறையானந்தராக வரும் ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களும், அவருடைய பிரதம சீடரான மாசிலாமணியாக நடிக்கும் நாராயணப் பிள்ளை அவர்களும் முக்கிய பாகங்களை நலம்பெற நடித்துள்ளார்கள். மடாதிபதிகளுக்குரிய பேச்சும், போக்கும் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

பணியாளராக நடிக்கும் எம். என். கிருஷ்ணன் நகைச்சுவைப் பகுதிகளை ஆங்காங்கு உண்டாக்கிச் செல்லுகிறார்.

மற்றபடி சில்லறை வேஷங்களில் ஒவ்வொருவரும் வெற்றிகரமாக நடித்துள்ளார்கள்.

உடுமலை நாராயணக்கவி அவர்கள், இந்தக் கதைக்குரிய பாடல்களனைத்தையும் இயற்றியுள்ளார். பாடல்களில் தமிழ் கொஞ்சுகிறது; கனி துள்ளுகிறது, இசை மிஞ்சுகிறது.

இசையமைப்பு மறைந்த சி. ஆர். சுப்பராமன், எம். எஸ். விஸ்வநாதன், டி. கே. ராமமூர்த்தி, இவர்களால் மிகவும் வியத்தகு முறையில் அமைக்கப்பட்டுள்ளது. பாட்டுக்களையல்லாமல், ஆங்காங்கு முக்கிய கட்டங்களில் வருகிற பின்னணி இசை, உயர்தர ஆங்கிலப்படங்களில் வருவதைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஒளிப்பதிவு—வெளிப்புறக் காட்சிகள், மலைவளம், நாட்டுவளம், போராட்டக் கட்டங்கள்—முதலியன ஜி. துரை அவர்களால் சிறப்புறச் செய்யப்பட்டுள்ளன.

உயர்ந்த கதை, சிறந்த நடை, அழகான பாடல்கள், இனிய இசை இவற்றையெல்லாம் ஒன்றுகப் பிணைத்து, புகழ்தரும் திரையோவியத்தைத் தீட்டித்தந்த பெருமை டைரக்டர் காசிலிங்கம் அவர்களைச் சாரும். மிகப்பெரும் பொறுப்பை மிகத்திறம்படச் செய்துள்ளார். இந்தப் படத்தின் மூலம், அவரது ஆற்றல் முன்னினும் அதிகமான அளவு புகழ்பெற்று விளங்கும் என்பது திண்ணம்.

படத்தயாரிப்பின் நிர்வாகத்தையேற்றுச் செயலாற்றிய வேல்மணி அவர்களும், மற்ற அலுவலகத்தினரும் பாராட்டுதலுக்குரியவர்கள்.

"சொர்க்கவாசல்" கதையைத் திரைப்படமாக்கிய பரிமளம் பிக்சர்சாரையும், தயாரிப்பாளர்களான எம். சோமசுந்தரம், எஸ். காளியப்பா அவர்களையும் போற்றுகிறோம்.

"சொர்க்கவாசல்" மிகச்சிறந்த திரைப்படம், கருத்தும், செயலும், அறிவும், திறனும் விளங்கிடும் கலைச்சித்திரம், இசைக்களஞ்சியம். அதை வரவேற்கிறோம்.

அட்டைப்படம்

"சோர்க்கவாச"லில் மதிவாணனுகத் தோன்றும் கே. ஆர். ராமசாமி.

ஓராண்டுக் காலத்தில்

ஆட்சிபீடத்திலிருக்கும்பொழுது, ஆச்சாரியார் ஆணவத்துடன், தீர்க்கதரிசி என்ற அகங்காரத்துடன் பேசிக்கொண்டிருந்தார். எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தப் போவதில்லை யெனக் கல்வித்திட்டத்தைப் புகுத்தும்பொழுது, ஆச்சாரியார் இறுமாப்புடனிருந்தார். அவரது திட்டத்தை நிறைவேற்றிவைக்கக் கல்வி மந்திரி கனம் சுப்பிரமணியம் முன்னேடும் பிள்ளையாக இருந்தார்.

ஆனால் அதே கல்வி மந்திரி கனம் சுப்பிரமணியம் இப்பொழுது, புதிய கல்வித்திட்டத்தைப் புதைத்த குழிமீது கல்நாட்டினர்.

ஓராண்டுக் காலத்தில் எவ்வளவு மாறுதல், எவ்வளவு இறக்கம்!

கல்வித்திட்டத்தைக் கைவிட்டதாக, மதிமந்திரி சுப்பிரமணியம் 18—5—54-ல் சென்னை சட்டசபையில் அழுகுரல் வைத்தார். ஆனல் ஓராண்டுக்கு முன், அதாவது 18—5—53-ல் அவருடைய தலைவர் ஆச்சாரியார் எவ்வளவு இறுமாப்புடன் இருந்தார் தெரியுமா?

18 - 5 - 53-ல்

சேலம் பொதுக்கூட்டம் ஒன்றில் ஆச்சாரியார் பின்வருமாறு பேசினர்:

"காங்கிரசின் சார்பாக அல்ல, தெய்வத்தின் சார்பாக நான் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கிறேன்.

தார்மீக ஆட்சி நிலவுமேயானல், தேசத்தில் சமாதானமும், சுபிட்சமும் செழிக்கும், பஞ்சம் பட்டினி ஒழியும்.

தார்மீக ஆட்சியை உண்டாக்குவதில் நான் வெற்றியடைந்தால், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் வேறு வழிகளில் செல்ல முடியாது.

தேசத்தின் ஆதரவால், எனது ஆட்சி நீடிக்குமென்ற நம்பிக்கையும், அதனல் நாட்டிற்காகப் பலவற்றைச் செய்யவேண்டுமென்ற எண்ணமும் எனக்கிருக்கிறது."

18 - 5 - 54-ல்

சென்னை சட்ட சபையில் கனம் சுப்பிரமணியம் பின்வருமாறு பேசினர்:

"எங்களால் முடிந்தவரை எவ்வளவு செய்தும், பிரசாரம் நடத்தியும், புதிய கல்வித்திட்டத்துக்கு மக்களின் சம்மதத்தைப் பெறமுடியவில்லை. பொதுமக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் எங்களால் பெற முடியவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

கட்சித் தீர்மானப்படி மற்றக் கட்சியினரின் ஆலோசனைப்படி, புதிய கல்வித்திட்டத்தை அரசாங்கம் கைவிடுகிறது என்பதை அறிவிக்கிறேன்.

கடந்த சில நாட்களாக எனக்குத் தூக்கமே கிடையாது; இன்னும் நான் இருட்டில் தடுமாறுகிறேன்; வெளிச்சம் தென்படவில்லை."

18—5—53-ல் ஆச்சாரியார் எவ்வளவு ஆணவத்துடன், தெய்வத்தின் பிரதிநிதி தார்மிக ஆட்சியின் தலைவர், என்றெல்லாம் பேசி, புதிய திட்டங்களைக் கொண்டுவருவதில் மமதையாக இருந்தார்.

18—5—54-ல் சென்னை சட்டசபையில், அவரது அருமந்த பக்தர் கனம் சுப்பிரமணியம் மக்களின் எதிர்ப்பால் திட்டம் மட்டந்தட்டப்பட்டதாக அழுகுரலில் கூவினர்.

18—5—53-ல் தெய்வத்தின் சார்பாக, ஆச்சாரியார் ஆட்சி நடத்தினர்; கல்வித்திட்டத்தைக் கொண்டுவந்திருந்தார்.

18—5—54-ல் கட்சியின் சார்பாக கனம் சுப்பிரமணியம் பேசினர்; கல்வித்திட்டத்தைக் கைவிட்டார்.

18—5—53-ல் மகேசனின் பிரதிநிதியென ஆச்சாரியார் ஆர்பரித்தார்.

18—5—54-ல் மக்களின் எதிர்ப்புக்கு பணிவதாகச் சுப்பிரமணியம் கண்ணீர்விட்டார்.

சரியாக ஓராண்டு, அடாணுவுக்கும் முகாரிக்கும் இடையில் ராகம் மாறியதற்கு எடுக்கப்பட்ட காலம்.

குன்றக்குடியாருக்குக் 'காணிக்கை'!-4

[இரா. நெ.]

உருவ வழிபாட்டின் மூலம் 'ஆண்டவன் அருளைப்' பெற்று, நல்வாழ்வு வாழ விரும்பு கிறார்கள் உருவ வழிபாட்டுச் சமயத்தவர்கள்.

உருவ வழிபாடு இல்லாமலேயே, 'ஆண்டவன் அருளை'ப்பெற்று நல்வாழ்வு நடத்த விரும்புகிறார்கள் உருவ வழிபாடற்ற சமயத் தவர்கள்.

உருவ வழிபாடும் இல்லாமல், 'ஆண்டவன் அருளை'யும் பெறாமல் நல்வாழ்வு வாழ விரும்பு கிறார்கள் பகுத்தறிவு நெறியினர்.

உருவ வழிவாட்டுச் சமயத்தவர்களைக் காட்டிலும், உருவ வழிபாடற்ற சமயத்தவர்கள் எந்தவகையிலே கெட்டுப்போய்விட்டார்கள்? அவ்விருவகையினரைக் காட்டிலும், உருவ வழிபாடும் அற்று, 'ஆண்டவன்' அருளும் அற்று வாழும் பகுத்தறிவு நெறியினர் எந்த வகை யிலே கெட்டுப்போய்விட்டார்கள்? உலக வாழ்வில் ஏற்படும் நன்மை தீமை, இன்பதுன்பம், கஷ்டநஷ்டம், தொல்லைதுக்கம், வாழ்வு வளம், கல்வி கேள்வி ஆகியவைகள் எல்லோரையும் ஒருபடியாகத்தானே தாக்குகின்றன! 'உருவ வழிபாட்டின் பலன்' 'ஆண்டவன் அருள்' இரண்டையும் சேர்த்தோ, அல்லது ஒன்றை மட்டும் தனியாகவோ பெற்றவர்கள், அவ்வி ரண்டையும் பெறாத பகுத்தறிவு நெறியினரைக் காட்டிலும் எந்த வகையிலே, ஒருமித்துச் சிறந்தவர்களாகக் காட்சியளிக்கிறார்கள்? உருவ வழிபாட்டினர் தனியாக அடையும் 'நன்மை' என்ன?— அவ்வழிபாடு அற்றவர்கள் தனியாக அடையும் 'தீமை' என்ன? என்பதை அருள் நெறித் திருக்கூட்டத்தார் விளக்கிடவேண்டு மன்றோ?

குன்றக்குடி அடிகளார் சில பல கூட்டங் களில் பேசும்போது, "கோடியிலே கொள்கையைக் காணுபவர்கள், கல்லிலே கடவுளைக் காண மறுப்பதேன்?" என்னும் கருத்துப்பட, பேசி வருவதாகக் கேள்வியுற்றோம். அடிகளார் பகுத்தறிவியக்கத்தினரை மனதில் வைத்துக் கொண்டுதான், அத்தகைய கேள்வியை எழுப் புகிறார் என்பதை, எவரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடும்.

கொடியிலே பகுத்தறிவாளர்கள் கொள்கை யைக் காணுவதற்கும், கல்லிலே அடிகளார் 'கடவுளை'க் காணுவதற்கும் உள்ள வேறு பாட்டை உணர்ந்துகொண்டால், மேற்கண்ட கேள்வியைக் கேட்க எவரும் துணிவுகொள் ளார். கொடி, எங்கணும் ஒரு குறிப்பிட்ட கொள்கையின் அடையாளமாகவோ அல்லது ஒரு கட்சியின் குறிக்கோளின் அறிகுறியா கவோ கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டா கத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் கறுப்பு, சிவப்பு என்ற இரு வண்ணங்கள் காணப்படுகின்றன கறுப்பு திராவிடத்தின் இழி வைக் காட்டும் அறிகுறியாகவும், சிவப்பு திரா விடம் பெறவேண்டிய புரட்சி நிலைமையின் அறிகுறியாகவும் விளங்குகின்றன. திராவிடத் தின் இழிவு ஒழியவேண்டும் என்பதும், திரா விடத்தில் புரட்சி ஓங்கவேண்டும் என்பதும் நிறங்களுக்கு ஏற்றப்பட்டிருக்கும் கருத்துக் களாகும். உலகெங்கணும் பொதுப்படையாக இருளுக்கு — இழிவுக்கு — அறியாமைக்குக் கொள்ளப்பட்டிருக்கும் நிறம் கறுப்பு; ஒளிக்கு —புரட்சிக்கு— அறிவுடைமைக்குக் கொள்ளப் பட்டிருக்கும் நிறம் சிவப்பு. 'இழிவு ஒழிக! புரட்சி ஓங்குக!' என்பதுதான் கொடிபற்றி எழுப்பப்படும் ஒலிமுழக்கமாகும். இந்தக் கருத்துக்களையெல்லாம் கழகத்தார் கொடிக் குக் கற்பித்துள்ளார்கள்—கொடியின்மீது ஏற்றி

யுள்ளார்கள்; ஆனால் கொடி தானாகக் கற்பித்துக் கொள்ளவோ—ஏற்றிக்கொள்ளவோ இல்லை என்பதை உணரவேண்டும். கொடியைக் கழகத்தார் காணும்போது, அது தங்கள் குறிக்கோளைத் தாங்கிநிற்கிறது என்று எண்ணிக்கொள்கிறார்கள். எந்தக் குறிக்கோளுக்காக என்று கொடி கற்பித்துக்கொள்ளப்பட்டதோ, அந்தக் கருத்துக்களைக், காண்போர்—நினைப்போர் உள்ளத்தில் நினைவுபடுத்தும் அறிகுறியாக அது இருக்கிறது என்று பொருள். கழகத்தார் கொடியை மதிக்கிறார்கள் என்றால், அதற்கு ஊட்டப்பட்ட கருத்துக்களை மதிக்கிறார்கள் என்று பொருள்; அதற்கு மரியாதை செய்கிறார்கள் என்றால், அது உணர்த்திநிற்கும் கருத்துக்களுக்கு மரியாதை செய்கிறார்கள் என்று பொருள். பிற கட்சிக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ள—மதிக்க மறுக்கிறார்கள் என்றால், அந்தக் கொடிகள் உணர்த்தும் கொள்கைகளுக்கு உடன்பாடில்லை என்று பொருள். கழகத்தார் கொடியில் தாம் கற்பித்த கொள்கைகளைக் காணுகிறார்களேயொழிய, அந்தக் கொடிக்கு உயிர் இருப்பதாகவோ, உள்ளம் இருப்பதாகவோ, அதற்குப் பார்க்கும் கண்ணும், கேட்கும் செவியும், பேசும் வாயும், சுவைக்கும் நாக்கும், நுகரும் மூக்கும் இருப்பதாக நினைத்து அதனைக் காண்பதில்லை; அது சாதாரணத் துணி என்பதை நன்றாக உணர்கிறார்கள். அதுபோலவே விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சிவன், விஷ்ணு, பிரம்மா, பார்வதி, இலட்சுமி, சரஸ்வதி, காளியம்மன், மாரியம்மன், அங்காளம்மன், பிடாரியம்மன், இருளன், காட்டேரி, சங்கிலிக் கருப்பன், சடையாண்டி, ஐயனார் போன்ற கற்சிலைகள், அவற்றிற்குக் கற்பிக்கப்பட்ட சில 'தத்துவங்களை' மக்களின் உள்ளத்தில் நினைவுபடுத்தும் அறிகுறிகளாக நிற்கின்றனவேயொழிய, மற்றபடி அவையெல்லாம் கற்கள்தாம் என்று சொல்லி, அடிகளார் அமைவாரேயானால், அவர் கொடியோடு கற்சிலையை ஒப்பிட்டுக் காட்டுவதில் பொருளிருக்கமுடியும். சிலைகளுக்குக் கற்பிக்கப்படும் 'தத்துவம்' ஏற்றதாகவும், பொருத்தமாகவும் இருக்குமேயானால், அச்சிலைகளைக் கண்டு, அத்தத்துவத்தைப் புரிந்துகொள்ள முயலுவதில் யாருக்கும் யாதொரு தகராறும் இருக்கமுடியாதே! ஆனால் குன்றக்குடியார், நாம் கொடியை மதிக்கும் அளவுக்குத்தான் கற்சிலையையும் மதிக்கிறோமா என்று அறிய விரும்புகிறோம், நாம் கொடியிடம் எவ்வளவு எதிர்பார்க்கிறோமோ அவ்வளவுதான், அடிகளாரும் கற்சிலைகளிடத்தில் எதிர்பார்க்கிறாரா? நாம் கொடியிடம் கொள்கையைத்தான் நினைவுபடுத்திக்கொள்கிறோமேயல்லாது, அதனிடம் அறிவு, ஆற்றல், உள்ளம், பேசும் வாய், கேட்கும் செவி, நுகரும் மூக்கு, சுவைக்கும் நாக்கு, பார்க்கும் கண், நமது முற்கால—இற்றைக்கால—பிற்கால நடவடிக்கைகளைச் சிந்தித்துப்பார்த்துச் சொல்லும் திறன், கேட்ட வரமளிக்கும் தன்மை ஆகியவையெல்லாம் இருப்பதாக ஒப்புக்கொள்வதுமில்லை; எதிர்பார்ப்பதுமில்லை; அதுபோலவேதான், கற்சிலைகள், உணர்த்தும் தத்துவம் ஏதாவது இருந்தால் அதை வேண்டுமானால் பொருத்தமுடையதுதானா என்று அலசிப்பார்த்து, ஏற்றதாக இருந்தால், தேவையெனப்பட்டால் பிறகு அந்தக் கற்சிலைகளைப்பார்த்து அந்தத் தத்துவத்தை நினைவுபடுத்திக் கொள்ள முயலலாம்; அதே போழ்து அக்கற்சிலைகளுக்கு அறிவு, ஆற்றல், உள்ளம், வாய், நாக்கு, மூக்கு, செவி, கண், கேட்டவரம் அளிக்கும் தன்மை, சிந்தித்துப் பார்க்கும் திறம் ஆகியவைகள் இருப்பதாக ஒப்புக்கொள்வதுமில்லை; எதிர்பார்ப்பதுமில்லை! இதில் என்ன தவறு என்று குன்றக்குடியாரைக் கேட்கிறோம்! மனதிற்குகந்த கொள்கையின் அறிகுறியாக இருக்கும் கொடியை மதிப்பதைப் போல, மனதிற்குகந்த—அறிவுக்கேற்ற—கருத்திற்கோத்த கொள்கையின் அல்லது தத்துவத்தின் அறிகுறியாக இருக்கும் கற்சிலையையும் அந்த அளவுக்கு மதிக்கத் தயாராயிருக்கிறோம்! கருத்துக்கு ஏற்காத—மனதிற்குப் பிடித்தமில்லாத கொடியாக இருந்தால், அதற்கு எப்படி மதிப்பு அளிக்க மறுக்கிறோமோ, அதுபோலவே, கருத்திற்கும் மனதிற்கும் ஒத்துவராத கற்சிலைகளுக்கும் மதிப்பு அளிக்க மறுக்கிறோம்.

சிலைகளை நாம் பார்க்கிறோம்; அந்தப் பார்வை உணர்ச்சி நினைவு அலைகளைக் கிளறுகின்றது; அப்படிக் கிளறும்போது, ஒன்று அச்சிலைகளைப் பொறுத்து ஏற்கனவே கற்பித்து வைக்கப்பட்ட எண்ணங்கள் நினைவிற்கு வருகின்றன; அல்லது அந்தத் தோற்றத்தோடு தொடர்புடைய பொருள்களைப்பற்றிய நினைவும், கருத்துக்களைப்பற்றிய நினைவும், வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய நினைவும் சிந்தனையில் எழுகின்றன. சிலைகளைக் கண்டவுடன் உள்ளத்தில், அவரவர் சிந்தனைத் திறனுக்கு ஏற்ப எழும் எண்ணங்களும், நினைவுகளும், அவரவரின் அறிவுக்கும்

மனதுக்கும் பிடித்த முறையினவாற் இருந்தால் அவற்றிடம் அன்பும் மதிப்பும் செலுத்துகிறார்கள்; அவைகள் பிடித்தமற்றவையாக இருந்தால் அவற்றிடம் அருவருப்பும், அலட்சியமும் கொள்கிறார்கள்.

அமெரிக்காவில் 'விடுதலை சிலை' ஒன்றை நிலைநாட்டியுள்ளார்கள். அதனைப் பார்ப்பவர்கள் அச்சிலைக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் விடுதலைக் கருத்தை நினைவுபடுத்திக்கொள்கிறார்கள். ஆனால் அதனைக் 'கேட்டவரம் அளிக்கும் கீர்த்தி வாய்ந்த தெய்வம்' என்று எவரும் வரம் கேட்டு நிற்பதில்லை. ஜப்பானிலுள்ள வாயை மூடிக்கொண்டிருக்கும், கண்ணை மூடிக்கொண்டிருக்கும், காதை மூடிக்கொண்டிருக்கும் மூன்றுவிதக் குரங்கு சிலைகளைப் பார்ப்பவர்கள், அவற்றிற்கு முறையே கற்பிக்சப்பட்டிருக்கும் 'பொய்யைப் பேசாதே', 'பொய்யைப் பார்க்காதே', 'பொய்யைக் கேட்காதே', என்ற கருத்துக்களை நினைவுபடுத்திக்கொள்ளுகிறார்கள். இந்தக் கருத்துக்கள் நல்லனவாகவும், அறிவுக்கு ஏற்றனவாகவும் இருப்பதால் அச்சிலைகளை மதிக்கத் தடையில்லை. அவற்றிற்குக் 'கேட்ட வரவளிக்கும் தன்மை' உண்டு என்று கூறினால் அந்தக்கூற்றை மறுக்கிறோம்.

ரஷ்யாவிலுள்ள தொழிலாளி லெனின் சிலையை மதிக்கிறான்; ஜாரின் சிலையை அலட்சியப்படுத்துகிறான். காரணம் லெனின் சிலை நினைவூட்டும் கருத்துக்கள் அவனுக்கு மகிழ்ச்சி தருகின்றன; அதே சமயத்தில் ஜார் சிலை நினைவுபடுத்தும் கருத்துக்கள் வெறுப்பு தருகின்றன. அதுபோலவே காங்கிரஸ்காரர் கண்ணில் படும் காந்தியாரின் சிலை மகிழ்ச்சியைத் தருகிறது; அவர்களின் கண்ணில் படும் டயர் சிலை வெறுப்பைத் தருகின்றது. அதுபோலவே பெரியாரின் சிலையைப் பார்க்கிற பகுத்தறிவாளனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது; அதே பகுத்தறிவாளனுக்குத் திருவாவடுதுறை பண்டாரசன்னதியின் சிலை அவ்வளவு மகிழ்ச்சியைத்தருவதில்லை. ஆனால் சைவ சமயத்தைச் சேர்ந்த ஒருவர் அந்த இரண்டு சிலைகளையும் பார்க்கும்போது, பகுத்தறிவாளனுக்கு ஏற்பட்டதற்கு நேர் மாறான உணர்ச்சிகள் தோன்றும்.

விநாயகர், சுப்பிரமணியர், சிவலிங்கம், விஷ்ணு, பிரம்மா, காளி, மாரி, ஐயனார் போன்ற கற்சிலைகளுக்கு ஏற்பட்டிருக்கும் கருத்துக்கள், அறிவாராய்ச்சிக்கும், மனவிருப்பத்திற்கும் ஏற்றனவாக இல்லை, எனவே அந்தச்சிலைகளை மதிக்க மறுப்பதாகப் பகுத்தறிவாளர்கள் கூறினால் அதில் என்ன தவறு? அக்கருத்துக்கள் பற்றி வாதாட வல்லமையுண்டென்றால், மெய்யன்பர் கூட்டம் வாதாட வரலாம்; இல்லையேல் வாயடக்கி வாளாயிருந்து, வம்புக்கிழுக்காமல், தம் போக்கிலே சென்றுகொண்டிருக்க வேண்டும்!

இந்தக் கடவுளர் சிலைகளெல்லாம் உயர்ந்த தத்துவங்களை உணர்த்தி நிற்கின்றன, அத்தத்துவங்களை அறிந்துகொள்ளும் ஆற்றல் பகுத்தறிவாளர்களுக்கு இல்லை என்று சில மெய்யன்பர்கள் ஏசலில் இறங்கக்கூடும். எடுத்துக்காட்டாக 'விநாயகர்' சிலை, 'ஓம்' என்ற ஓசையின் வரிவடிவாக அமைந்து, அந்த ஓசையை நினைவூட்டிக்கொண்டிருக்கிறது என்று சிலர் செப்புவர். அந்தத்தத்துவம் சரியா தவறா, பொருந்துமா பொருந்தாதா, தேவையா தேவையற்றதா என்ற ஆராய்ச்சியில் இறங்குவது ஒருபக்கம் இருந்தாலும், அந்த 'விநாயகர்' சிலையைக் கண்டு அந்தத் தத்துவத்தை நினைவுபடுத்திக் கொள்வதில், நமக்கு ஒன்றும் கடினம் இல்லை. ஆனால் அந்த 'விநாயகர்' சிலையை, கற்பிக்கப்பட்ட தத்துவத்தை உணர்த்திநிற்கும் உணர்ச்சியற்றகல் என்று கருதுவதா அல்லது கேட்ட வரம் அளிக்கும் உணர்ச்சியுடைய பொருள் என்று கருதுவதா என்பது கேள்வி! அது உணர்ச்சியற்ற கல்தான், உணர்ச்சியுடைய—ஆற்றலுடைய பொருள் அல்ல என்றுதான் பகுத்தறிவாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் குன்றக்குடியாரும் அவரது மெய்யன்பர்கூட்டமும், 'விநாயகர்' சிலை, உணர்ச்சியுடைய—ஆற்றலுமுடைய—நம்மிடம் கடமையை எதிர்பார்க்கும்—கேட்ட வரம் அளிக்கும் பொருள் என்ற முறையில்தான் பேசியும், எழுதியும், வழிபட்டும் வருகின்றனர். அந்த அளவுக்கு, அதாவது குன்றக்குடியார் 'விநாயகர்' சிலையை மதிக்கும் அளவுக்குப் பகுத்தறிவாளர் அதனை மதிக்க மறுக்கவே செய்கின்றனர். அதில் என்ன தவறு? கடவுளர் சிலைகளெல்லாம் உணர்ச்சியற்ற கல்—உலோகப்—மரம்—மண்—சுண்ணாம்பு என்று நிரூபித்துக் காட்டவேண்டுமானால், எந்தப் பாடல்பெற்ற கோயில் சிலைகளிடத்தும், குன்றக்குடியாரின் அனுமதியின் பேரில் செய்துகாட்டப் பகுத்தறிவாளர்கள் தயாராகவே இருக்கிறார்கள்.

குன்றக்குடியாரே! கோயில்களில் வைக்கப்பட்டிருக்கும் சிலைகள், கற்பிக்கப்பட்ட கொள்

கைகளை மட்டுமே மக்களுக்கு நினைவுபடுத்தும் அறிகுறிகளாகவா வைத்திருக்கிறீர்கள்? கோவில்களிலுள்ள கற்சிலைகளுக்கு அறிவு உண்டு, ஆற்றல் உண்டு, உள்ளம் உண்டு, கண்டு—கேட்டு—உண்டு—உயிர்த்து—உற்று அறியும் ஐம்புலனும் உண்டு, தூப தீப நைவேத்தியங்கள் பெறும் விருப்பம் உண்டு, வரம் அளிக்கும் திறன் உண்டு, வாதனை புரியும் வன்மையுண்டு, செப்புக் கம்பியில் மின்சாரத்தைப் பாய்ச்சுவதைப்போல தம் தன்மையை உற்சவ மூர்த்திகளுக்குப் பாயச்செய்யும் திறன் உண்டு, ஆண் சிலைக்கு ஆண் உணர்ச்சி உண்டு, பெண் சிலைக்குப் பெண் உணர்ச்சி உண்டு, இரண்டு சிலைகளும் செப்பு உருவிலே சென்று படுக்கையறையில் படுத்துக்கொள்ள ஆவல் உண்டு, ஊருக்கு ஊர் இருக்கும் ஒவ்வொரு கற்சிலையும் ஒவ்வொருவிதத் திருவிளையாடல் புரிய திறன் உண்டு, திருச்செங்காட்டாற்குப் பிச்சையெடுக்க விருப்பம் உண்டு, மீனாட்சியம்மைக்குச் சொக்கநாதரைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் உண்டு, கள்ளழகருக்குத் துலுக்கச்சி நாச்சியார் வீட்டில் ஒரு இரவு கழிக்க விருப்பம் உண்டு என்று இவ்வாறெல்லாம், குன்றக்குடியார், உள்ளபடியே ஏற்றுக்கொள்ளுகிறாரா? ஏற்றுக்கொள்ளுகிறார் என்றால், பகுத்தறிவாளர்கள் கூறுகிறார்கள் அத்தன்மைகள் அவைகளுக்கு இல்லை, அவை உருவங்காட்டி நிற்கும் வெறும் கற்கள்தாம் என்று! அடிகளார் காணும் அந்தக் 'கடவுள் தன்மையை'க் காண அவர்கள் உறுதியாக மறுக்கிறார்கள்! 'தத்துவார்த்தங்கள்' வேண்டுமானால் கூறட்டும்; அந்தத் 'தத்துவார்த்தங்கள்' பொருத்தமானவையா என்று ஆராய்ந்து பார்த்து ஏற்கவோ, தள்ளவோ முயலலாம்!

பகுத்தறிவாளர்கள் கொடியை எப்படி உணர்ச்சியற்ற துணி என்று கருதுகிறார்களோ அதுபோலவேதான் கடவுளர் சிலையையும் உணர்ச்சியற்ற கல் என்றே மதிக்கிறார்கள். கொடியிலே கொள்கையைக் காணுவதைப் போல, கடவுளர் சிலையிலே தத்துவார்த்தங்களைக் காணத் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் கூறப்படும் தத்துவார்த்தம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்திவருகிறதா என்று பார்க்கிறார்கள்; இதுவரையில் கடவுளர் சிலைகள்பற்றிக் கூறப்பட்ட கதைகளும், கருத்துக்களும், தத்துவார்த்தங்களும் அறிவுக்குப் புறம்பானவை என்று கண்ட காரணத்தால் தான் அவற்றை மதிக்கப் பகுத்தறிவாளர்கள் மறுக்கின்றனர்.

சைவ மெய்யன்பர் கூட்டம் 'விநாயகர்' சிலையிலே, தத்துவார்த்தத்தைக் காணுகிறதா? அல்லது புராணங்களிலே 'விநாயகரை'ப்பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களை ஏற்று, அந்தச் சிலைக்கு ஆற்றல் உண்டு என்று நம்பி, அதனிடம் வரம் கேட்டு வாழ விரும்புகிறதா? பின்னதைத்தான் மெய்யன்பர் கூட்டம் முழுக்க முழுக்க செய்கிறது என்பதைக் குன்றக்குடியார் மறுக்கத் துணிவாரா? அத்தகைய 'கடவுளை'க் கல்லிலே காண மறுப்பதிலே தவறு என்ன என்று குன்றக்குடியாரைக் காரண காரிய விளக்கத்தோடு கேட்கிறோம்.

பகுத்தறிவாளர்கள் தங்கள் கொடியிலே தங்கள் கொள்கையை மதிப்போடு காண்கிறார்கள்; ஆனால் அந்தக் கொள்கையைக் கொடி கொடுப்பதாகக் கொள்வதில்லை; அந்தக் கொள்கையை மாற்றுக் கொள்கையுடையோர் மறுக்கவோ, வெறுக்கவோ செய்வதை இயற்கைக்கு மாறான செயல் என்று எண்ணுவதில்லை.

அதுபோல கல்லிலே மதிப்போடு கடவுளைக் காணும் குன்றக்குடியார், கல் அந்தக் கடவுள் தன்மையைக் கொடுக்கும் ஆற்றலைப் படைத்திருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள இசைகிறாரா? கொடியிலே தாங்கள் காணும் கொள்கையை மாற்றுக்கொள்கையுடையார் மறுப்பதோ, வெறுப்பதோ இயற்கைக்கு அப்பாற்பட்டதல்ல என்று, பகுத்தறிவாளர்கள் கருதுவதைப்போல, குன்றக்குடியார் தாம் கல்லிலே காணும் கடவுட்கொள்கையை, மாற்றுக் கொள்கையுடையார், மறுக்கவோ, வெறுக்கவோ செய்வதை இயற்கைக்கு மாறுபட்டதல்ல என்று ஏற்க இசைகிறாரா? குன்றக்குடியாரும், அவரது மெய்யன்பர் திருக்கூட்டமும் கல்லிலே காணும் 'கடவுட்தன்மை'யைப் பகுத்தறிவாளர்கள் மதிக்க மறுக்கின்றனர், வாதத்துக்கும், அறிவு ஆராய்ச்சிக்கும் அது ஒத்துவராத காரணத்தால்! எனவேதான், குன்றக்குடியாரின் கேள்வி, அடிப்படை அற்று வீழ்கிறது என்கிறோம்.

இதுகாறும் கூறியவற்றையெல்லாம் குன்றக்குடியாருக்குக் 'காணிக்கை'யாக இப்பொழுது வைக்கிறோம்! தேவைப்பட்டால் இனியும் வைக்க முயலலாம்!

எங்கும் ஊழல் மயம்

காங்கிரஸ் ஆட்சியின்கீழ் இருந்துவரும் இந்தியப் பேரரசின் நிர்வாகம், எவ்வளவு ஊழல் நிரம்பியதாக இருந்துவருகிறது என்பதை ஆண்டுதோறும் வெளியிடப்பெறும் ஆடிட் ஜெனரல் அறிக்கை தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டிவருகிறது. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் கண்டுள்ள ஊழல்களைக் கவனித்தாலே ஆட்சி நிர்வாகத்தின் 'அழகு' விளங்கும்!

1952-ம் ஆண்டில் மட்டும் பல்வேறு அமைச்சராலுவலகங்களில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 29,88,625.

1950-ல் லண்டனில் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒரு கட்டிட இடத்தை வாங்குவதற்காக இரண்டே பவுனை (ரூ 27) செலுத்தப்பட்ட மூலதனமாகக் கொண்ட ஒரு பிரிட்டிஷ் கம்பெனிக்கு, முன்பணம் அளித்து ஏதும் நடைபெறாமற் போனதால் ஏற்பட்ட நஷ்டம் 17,000 பவுன் (ரூ. 2,26,000).

வெளிநாட்டுத் தபால்களுக்குத் தேவையற்ற வழியில் வீண் விரயம் செய்த பணம் சில இலட்சங்கள்.

ஒரு அதிகாரியின் காரையும், சாமான்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் துறைமுகத்திலிருந்து அரசாங்கம் அப்புறப்படுத்திக் கொடுக்காத காரணத்தால் ஏற்பட்ட வீண் செலவு ரூ 2651. இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு பதம் என்பதுபோன்ற எடுத்துக்காட்டு.

1950-51-ல் லண்டன் ஹைகமிஷனர் அலுவலகத்தைச் சேர்ந்த 7 கார்கள் அவசியமற்ற நிலையில் புதுப்பிக்கப்பட்டதற்காகச் சில இலட்ச ரூபாய்கள் செலவு.

வெளிநாட்டிலுள்ள இந்தியத் தூதுவரகம் ஒன்று இரும்பு, எஃகுச் சாமான்களை முன்பணம் பெறாமல் வெளிநாட்டுக்கு அனுப்பிய வகையில் கைநழுவிப்போன பாக்கி ரூ. 3,62,186.

1947-48-ல் அரசாங்கத்துக்குச் சாமான்கள் சப்ளை செய்வதற்கான காண்ட்ராக்டுகள் பேரில் ஆடிட் ஆபீஸ் குமாஸ்தா ஒருவன் மோசடி செய்த தொகை ரூ 1,29,123.

இரசாயன எரு தொழிற்சாலை ஒன்றுக்கு இந்திய சர்க்கார் செலவழித்த தொகை ரூ. 22 கோடியில், ரூ. 13 கோடியைத் தனிப்பட்ட கம்பெனியொன்று தன்னுடைய வெளியிடப்பட்ட, செலுத்தப்பட்ட மூலதனமாக மாற்றிக்கொண்டுவிட்டது.

உலகப் பெரும்போர் முடிந்தவுடன் அமெரிக்கர்கள் விட்டுச் சென்ற ரூ. 19,50,031 பெறுமானமுள்ள சாமான்களைச் சப்ளை இலாகா அலுவலகம் ரூ. 63,170-க்கு விற்றுவிட்டதில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 18,86,861.

சமஸ்தானங்கள் இணைப்புக்குச் சற்று முன்னால், சமஸ்தான மன்னர்கள் பொதுப் பணத்தை தங்கள் பெயருக்கு மாற்றிக்கொண்டுவிட்ட வகையில் நஷ்டம் ரூ, 14,89,00,000.

உரிமையை மீறி சமஸ்தான மன்னர்கள் பணரொக்கம், சொத்து இன்னபிறவற்றை நிறுத்திக்கொண்ட வகையில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 7,11,32,114.

சமஸ்தான மன்னர்கள் சிவில் ஜாப்தா ரிஸர்வ் நிதிகளைப் பெருக்கிக்கொண்டுள்ள வகையில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1,16,95,712.

சமஸ்தான மன்னர்கள் கணக்கில் வராதபடி பதுக்கிக்கொண்ட தொகை ரூ. 2,56,28,013.

மன்னர்கள் சொந்தக்காரர்களின் பெயரால் மாளிகைகள் வாங்கிக்கொண்ட வகையில் ரூ. 15,05,019-ம், தம்முடைய பெயரால் மாளிகைகள் வாங்கிக்கொண்ட வகையில் ரூ. 11,87,574-ம் ஏற்பட்ட நஷ்டங்களாகும்.

இவற்றையெல்லாம் தவிர, மன்னர்கள் 21,900 ஏக்ரா நிலத்தையும், 75 கார்களையும், 39 கிராமங்களையும், 5 பங்களாக்களையும் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இவற்றோடு ஜீப் கார்கள், ரெடிமேடு வீடுகள், எண்ணெய்ச் சுத்திகரிப்புப் பொறிகள், துப்பாக்கிகள், கம்பளங்கள், டிராக்டர்கள் ஆகியவை பற்றிய ஊழல்கள் வேறுபக்கம் நாறிக்கொண்டிருக்கின்றன.

இதற்கெல்லாம் காரணம் கேட்டால், "புதுத் துறையில் அனுபவம் பெறவேண்டுமானால் யாரும் கொஞ்சம் கைவிட்டுப் பணம் செலவழித்தாகவேண்டும்" என்று இந்திய மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் கூறுகிறார். இன்னும் எத்துணைக் காலத்திற்கு இந்த ஊழல் முடைநாற்றம் வீசுமோ?

உரிமை மிகத் தொலைவில்!

[புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்]

புல்வெளி, சிறிய குன்று,
புனல்வற்று ஓடை சார்ந்த
நல்லதோர் காடு நோக்கி
நடந்தனர் வேடர் சில்லோர்.
வல்வலை கட்டி னார்கள் ;
விலங்குகள் வளைக்க லானார் ;
ஒல்லெனப் பறை தப்பட்டி
ஒலித்தனர் காட்டில் எங்கும் !

தாய்க்குதி ரைதன் குட்டி
தன்னோடு நடுக்கம் எய்தி
ஏய்ப்பவர் கட்டி வைத்த
வலையினில் ஏகி வீழச்,
சாய்த்தனர் தரையில் வேடர்
தாம்பினால் கட்டிச் சென்றார் !
தாய் செல்லும் குட்டி செல்லும்
தம்காட்டைப் பார்த்த வண்ணம் !

குட்டியைச், தாயை, வேடர்
குப்பன்பால் விற்று விட்டார்.
அட்டியில் லாது குப்பன்
அவைகளை வளர்த்து வந்தான்
குட்டிதான் வண்டிக் காகும் ;
குதிரைவீண் என்று கண்டான்.
கொட்டிலில் தாய்வ ருந்திக்
கிடந்தது காட்டை எண்ணி !

மண்டிடு தீனி தின்று
வளர்ந்திட்ட குட்டி தன்னை
வண்டியிற் பூட்ட லானார் !
வருத்தத்தை வழக்க மாக்கிக்
கொண்டது குட்டி ! ஓர்நாள்
குடைசாய்ந்து போன தாலே
வண்டியாற் பட்ட பாட்டை
வந்துதன் தாய்க்குக் கூறும் :

வண்டியிற் கட்டப் பட்டு
வருந்திடு கின்றேன் நாளும் !
புண்பட்டுடை தன்னிற் கொண்டேன் ;
புழுவெனத் துடித்தேன் அம்மா !
கொண்டதோர் அடிமை தானேன்
குன்றொத்த வண்டி தன்னை
அண்டாத நிலைமை பெற்றால்
அதுவேஎன் உரிமை வாழ்வாம் !

என்றது குதிரைக் குட்டி !
இதற்குள்ளே குப்பன் வந்து
குன்றுநேர் குட்டி தன்னை
வண்டிக்குக் கொண்டு போனான்
நின்றிட நேர மின்றி
நெடுவண்டி தனை இழுத்துச்
சென்றிடும் ; இவ்வா றாகச்
சென்றன பத்துத் திங்கள்

வண்டியை இழுக்கக் குட்டி
மறுத்தது ! கண்ட குப்பன்
சண்டியே, இனிமேல் நீயோர்
தனி "ஏறுகுதிரை" என்றான்
குண்டான் சூழ்பெற்ற ஏழை
குதிப்பெனக் குதித்துக் குட்டி,
வண்டியி னின்று பெற்ற
விடுதலை வாழ்த்திற் றங்கே !

தன்ஏறு குதிரை மீது
தான்ஏறிக் குப்பன் செல்வான்.
மின்போல உடல் நெளித்து
விரைமான்போல் ஓடும் குட்டி.
பின்புறம் வண்டி யில்லை
பெற்றேநான் விடுத லைதான்
என்றெண்ணி மகிழும் ! ஓர்நாள்
ஏகிற்றுத் தாயின் அண்டை

அம்மாநான் உரிமை பெற்றேன்
அம்மாநான் மகிழ்ச்சி பெற்றேன்
இம்மட்டும் நான டைந்த
இன்னல்கள் நீங்கப் பெற்றேன்.

அம்மிசுண் டெலிமேல் ஏறி
அமித்தல்போல் என்னை வண்டி
இம்மண்ணில் இனிஅமித்தா
தென்றது குதிரைக் குட்டி.

கடிவாளத் தால் கிழிந்த
கடைவாயில் குருதியாறு
வடிந்திட எதிரில் நின்று
மகிழ்ந்திடும் குட்டி தன்னை
உடைந்தஉள் ளத்தால் நோக்கி
உரைத்தது கிழத்தாய் : ஏஏ
அடிமையே உனைப் பிணித்த
ஆங்கில வண்டி யில்லை,

வடக்குள குப்பன் உன்றன்
வன்முது கின்மேல் ஏறிக்
கடிவாளம் இறுக்கு கின்றான்
கருதினாய் இல்லை! வாயில்
வடிகின்ற குருதி காணாய்!
வலிஉணர் கின்றா யில்லை
அடிமையை வியந்தாய் உன்றன்
அகத்தினில் இருளைச் சேர்த்தாய்.

வீழ்ந்தனை அடிமைச் சேற்றில்;
விடுதலை விழா மேற் கொண்டாய்!

ஆழ்ந்துபார் உன்நா டெங்கே?
அருங்கலை ஒழுக்க மெங்கே?
தாழ்ந்து தாழ்ந் தெவனை நீபோய்த்
தாங்கிட ஒப்பு கின்றாய்
வாழ்ந்தநம் உரிமை வாழ்வை
நினைக்கவும் மறுக்கின் றாயா?

கடிவாளப் பிடிப்புக் கப்பால்,
கதைத்திடு மதமென் கின்ற
நெடுங்குன்றுக் கப்பால், சாதி
நிறைமுள்ளுக் காட்டுக் கப்பால்
மடிவிலாக் கலை,சொல் பூக்கும்
மணிப்புனல் ஓடை தன்னை
உடையபுல் வெளியி லன்றோ
உன்முழு துரிமை உண்டு!

என்றுதாய்ப் பரி உரைத்தே
எதிரில்தன் குட்டி தன்னை
நன்றொரு முறையும் நோக்கி
நளிர்புனல் ஓடை தன்னை,
மின்னுபுல் வெளியை நெஞ்ச
வெளியினில் நோக்கி நோக்கித்
தன்னுயிர் விட்ட தங்கே
தன்குட்டிக் குரிமை காட்டி!

வடமொழிக்கும் தென்மொழிக்கும் வேறுபாடு

1. எழுத்துக்களின் தொகை (உண்மையானபடி) வடமொழியில் 42; தென்மொழியில் 31.
2. வடமொழி யொலிகள் வலியன; தென்மொழி யொலிகள் மெலியன.
3. மூச்சொலிகள் வடமொழியில் மட்டுமுண்டு.
4. கூட்டெழுத்துக்கள் தென்மொழியில் இல்லை.
5. வடமொழியில் உயிர்கள் (தீர்க்கம், குணம், விருத்தியென மூவகையில்) நெடிலாக மாறிப் புணரும்; தென்மொழியில் உடன்படுமெய்பெற்றுப் புணரும்.
6. தமிழில் மொழி முதல் இடை கடை வராத எழுத்துக்களெல்லாம், வடமொழியில் மொழி இடை கடை வரும்.
7. இடுகுறிப் பெயர் தமிழுக்கில்லை.
8. முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மைப் பெயர் வட மொழியிலில்லை.
9. உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு வடமொழியில் இல்லை.
10. பால்கள் வடமொழில் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என மூன்று; அவை ஈறுபற்றியன; தமிழில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து; அவை பொருளும் எண்ணும் பற்றியன.
11. இருமை என்னும் எண் தமிழில் இல்லை.
12. முதல் வேற்றுமைக்கு உருபு வடமொழியிலுண்டு; தென்மொழியில் இல்லை.
13. குறிப்பு வினை வடமொழியில் இல்லை.
14. வடமொழியில் பெயரெச்சமும் பெயர்போல வேற்றுமை ஏற்கும்.
15. வடமொழில் வரும் முன்னொட்டு (Prefix)ச் சொற்கள் தமிழில் பின்னொட்டு (Surffix)ச் சொற்களாயிருக்கும்.
16. தழுவுஞ் சொல்லும் நிலைமொழியும் வடமொழியில் வருமொழியாயிருப்பதுண்டு. தமிழில் வழுவமைதியாயும் அருகியுமே அங்ஙனம் வரும்.
17. வினைத் தொகை வடமொழியில் இல்லை.
18. தமிழில் மிக முக்கியமாகக் கருதப்படும் பொருளிலக்கணம் வடமொழியில் இல்லை.
19. வெண்பா, ஆசிரியப்பா முதலிய பாக்களும் இவற்றின் வேறுபாடுகளும் இனங்களும் வடமொழியில் இல்லை.
20. இயல் இசை நாடகமெனத் தமிழை மூன்றாகப் பகுப்பதுபோல வடமொழியைப் பகுப்பதில்லை.

★ வெற்றிப் பாதை ★

1953

எப்ரல் 23—புதியதொரு ஆரம்பக் கல்வித்திட்டம் பற்றி சென்னை அரசியலார் கல்வித்துறை அதிகாரியின் அறிவிப்பு.

மே 31—அரக்கோணத்தில். தி. மு. க. பொதுக் குழு கூடி. புதிய கல்வித்திட்டம் பற்றிய கண்டனத் தீர்மானம் நிறைவேற்றல்.

ஜூன் 21—நாடெங்கணும் கண்டனக் கூட்டங்கள் நடத்திக். கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றிப், பொதுமக்கள் கையெழுத்துடன் சென்னை அரசியலாருக்கு அனுப்பிவைத்தல்.

28—விருதுநகரில் இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகத்தின் 2-வது மாநாடு கூடிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றல்.

ஜூலை 5—சிதம்பரத்தில் தென் ஆற்காடு தி. மு. கழகத்தின் 2-வது மாநாடு கூடி, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றல்.

8—தி. மு. க. வின் ஆதரவு பெற்றுச் சென்னைச் சட்ட சபை சென்ற எம். எல். ஏ-க்களிடம், கல்வித் திட்டத்தை எதிர்க்குமாறு வேண்டுகோள் அறிக்கையைக் கழக முன்னணி வீரர்கள் கொடுத்தல்.—ஆசைத்தம்பி, கண்ணபிரான். அலமேலு அப்பாதுரை உள்பட 57 பேர்கள் சென்னையில் கைது.

12—சென்னையில் சென்னை மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு கூடிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றல்.

13—தி. மு. கழகத்தின் மத்திய செயற்குழு கூடிப் புதிய கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத் திட்டம் வகுத்தல், தோழர் சம்பத் தலைமை வகித்து அறப்போர் நடத்துவது என்று தீர்மானம்—பொதுச் செயலாளர் அண்ணா, செயற்குழு உறுப்பினர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன். ஈ. வே. கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் கைது செய்யப்படல்.

14—ஆச்சாரியார் வீட்டுக்கு முன்னிலையில் தி. மு. கழகத்தின் அறப்போராட்டத் துவக்கம்.

14 முதல் 30 வரை நடந்த 15 நாள் போராட்டத்தில் அறப்போர் வீரர்கள் 377 பேர் கண்ணீர்ப்புகைக்கும் தடியடிக்கும் ஆட்பட்டு. கைதுசெய்யப்பட்டனர்.

31-ம் நாள் சட்டசபை மன்றத்தில் கல்வித்திட்டத்தை நிறுத்திவைக்கவேண்டுமென்ற கோரிக்கை வெற்றிபெற்றது.

இடையில் ஆரம்பப்பள்ளிகளின் முன் மறியல் செய்து சுமார் 1500 பேர்களுக்குமேல் சிறைபுகுதல்.

இதற்குப் பிறகு சட்ட சபை ஒத்திவைக்கப்பட்டதாலும், புதிய கல்வித்திட்டத்தை எதிர்த்து காங்கிரஸ் கட்சிக்குள்ளே காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள் போராடி வந்ததாலும். புதிய கல்வித்திட்டத்தை அகற்றுவதற்கான சூழ்நிலை சட்டசபையிலே உருவாகிவந்ததாலும் திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தை ஒத்திவைத்துத் தீவிரப் பிரச்சாரத்திலே ஈடுபட்டு எதிர்ப்புக் கனலை மக்கள் உள்ளத்திலே மூட்டுவதிலே கவனம் செலுத்திற்று.

ஆகஸ்ட் 23—சென்னை நீதி மன்றத்தில் நடந்த ஐவர் வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டு, அறிஞர் அண்ணா, சம்பத். நெடுஞ்செழியன் நடராசன், மதியழகன் ஆகியோர் 3 மாத சிறைவாழ்வை ஏற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரம் சட்ட சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஆச்சாரியாரின் புதிய கல்வித்திட்டத்தை விரைவில் ஒழிப்பதற்கான வலிவையும், வழிவகைகளையும் கொடுத்துவந்தது.

நவம்பர் 30—அறிஞர் அண்ணா, சம்பத் நெடுஞ்செழியன், நடராசன் ஆகியோர் விடுதலை. கடற்கரையில் மாபெரும் வரவேற்பு.

டிசம்பர் 10—தோழர் மதியழகன் விடுதலை. பெரம்பூரில் வரவேற்பு.

1954

எப்ரல் 10—புதிய கல்வித்திட்டத்தைப் புகுத்திய ஆச்சாரியார். அமைச்சர் குழுவிலிருந்துவெளியேற்றம்.

எப்ரல் 13—தோழர் காமராஜ் தலைமையில் எட்டு பேர் கொண்ட அமைச்சர் குழு அமைதல்.

இதற்கிடையில் திராவிடக் கழகத்தாரின் புதிய கல்வித் திட்ட எதிர்ப்புப் படை தோழர் டேவிஸ் தலைமையில் நாகையில் புறப்பட்டுச் சென்னை வந்து சேர்ந்தது.

மே 5—புதிய கல்வித் திட்டத்தை பரிசீலிக்கக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சியைச் சேர்ந்த எழுவர் அடங்கிய குழு ஒன்று காங்கிரஸ் சட்டசபைக் கட்சியால் நியமிக்கப்பட்டது.

மே 7—எழுவர் குழு சென்னை முதலமைச்சர் தோழர் காமராசர் தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

மே 10—எழுவர் குழு கூடி ஆச்சாரியாரின் புதிய கல்வித்திட்டத்தைக் கைவிடுவது என்று முடிவு செய்தனர்.

மே 13—காங்கிரஸ் சட்டசபைக் கட்சி கூடி ஆச்சாரியாரின் கல்வித்திட்டத்தைக் கைவிட சம்மதம் அளித்தனர்.

மே 18—சென்னை சட்ட மன்றத்தில் கல்வி மந்திரி தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

இது தெரியாதாம்— அது தெரியுமாம்!

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

நாம், வாழ்வின் ஓட்டத்தையும் எழுச்சியையும், சாவையும் பார்க்கிறோம்; அந்தப் பெரும் நாடகம் எப்பொழுதும் நடந்துகொண்டேயிருக்கிறது; அங்கே நடிகர்கள் தங்கள் தங்கள் பகுதிகளை நடித்துவிட்டு மறைந்துவிடுகின்றனர்; அந்தப் பெரும் நாடகத்தில் எல்லோரும் நடித்தேயாகவேண்டும்; அறியாதவரானாலும் அறிந்தவரானாலும், முட்டாளானாலும் பைத்தியமானாலும் நடித்தேயாகவேண்டும்; அதுவும் முன்கூட்டி ஒத்திகையில்லாமல், ஏற்று நடிக்க வேண்டிய உறுப்பின் தன்மை தெரியாமல், கதையின் உட்பொருளை உணராமல், நாடகத்தின் நோக்கத்தை அறியாமல் நடித்தேயாக வேண்டும். திரை மாறுகிறது; சில நடிகர்கள் மறைகிறார்கள்; வேறு சிலர் வருகிறார்கள்; மீண்டும் திரை மாறுகிறது; எங்கணும் அதிசயம். நாம் விளக்கங் கொடுக்க முற்படுகிறோம்; ஒரு உண்மைக்குக் கொடுக்கும் விளக்கம், மற்றொரு உண்மைக்கு மாறாகக் காணப்படுகிறது. ஒரு மறைப்புப் படுதாவை நீக்கினால், வேறோர் படுதா வந்து நிற்கிறது. எல்லாப் பொருள்களும், சம அளவில் அதிசயிக்கத்தக்கனவாக இருக்கின்றன எல்லாக்கடல்களையும்சேர்த்துப் பார்க்கும்போது ஏற்படும் வியப்பைப்போலவே, ஒரு துளித்தண்ணீரும் அதே அளவு வியப்பைத் தருகிறது; உலகம் முழுவதையும் போலவே, ஒரு தனி மணற்கல்லும் வியப்பைத் தருகிறது; எல்லா உயிரினங்களைப்போலவே, வண்ண இறக்கைகளைக் கொண்ட ஒரு விட்டில் பூச்சியும் வியப்பைத்தருகிறது. அகன்ற வானவெளியில் காணப்படும் எல்லா நட்சத்திரங்களைப் போலவே, ஒரு முட்டையும் வியப்பைத் தருகிறது; இருட்டில் வைக்கப்படும் முட்டையினுள் உள்ள உயிரணுவுக்குச், சூடு ஊட்டம் அளிக்கிறது, மூச்சுவிடும் உயிர்ப்பிண்டம் வளர்கிறது, தசைகள்—எலும்புகள்—நரம்புகள்—குருதி—மூளை எல்லாம் உருவாகின்றன, உணர்ச்சிகள்—ஆசைகள் — எண்ணங்கள் — தேவைகள் வளர்கின்றன, இவையெல்லாம் வியப்புக்குரியவைகளாக இருக்கின்றன.

மண்ணிலே மறைந்து கிடக்கும் மிகச்சிறிய விதை, ஏப்ரல் மழைகளுக்காகக் கனவு கண்டு, ஜூன் வெயிலுக்காகக் காத்திருந்து, அதனுடைய இரகசியங்களையெல்லாம், உலகிலுள்ள மிகச் சிறந்த அறிவாளிகளெல்லோராலும்கூட அறிந்துகொள்ளமுடியாத வகையில் மறைத்துவைத்து, வளர்ந்துவருகிறது. உலகில் காணப்படும் மிகச் சிறந்த அறிவாளிகூட, காரணம் கூறமுடியாத அளவில், புல்லிதழ் ஒன்றின் தோற்றமும், மிகச்சிறிய இலையொன்றின் அசைவும் அமைந்திருக்கின்றன. மிகச் சிறிய பொருளின் வியப்பிற்கு முன்னால், மதவாதிகளும்—குருமார்களும்— பாதிரிமார்களும்—போதகர்களும் வாய்திறக்கமுடியாதபடி நிற்கின்ற நிலைமையில் இருந்தும்கூட, அவர்கள் உலகங்களின் அடிப்படையை அறிந்திருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள்; உலகங்கள் எப்பொழுது தோன்றின, எப்பொழுது அழியும் என்பதையும் அறிந்திருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள்; கடவுளைப்பற்றிய எல்லாவற்றையும், அவர் எப்படிப்பட்ட விருப்பத்தோடு எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்பதையும் அறிந்திருப்பதாகவும் கூறிக்கொள்கிறார்கள்; அவர், எப்படிப்பட்ட திட்டத்தையும் நோக்கத்தையும் கொண்டிருக்கிறார், எந்த வழிகளைப் பயன்படுத்துகிறார், எந்த முடிவை எதிர்பார்க்கிறார் என்பதையெல்லாம் அறிந்திருப்பதாகவும் கூறிக்கொள்கிறார்கள். அவர்களுக்குக் கண்ணுக்குப் புலனாகாத அதிசயங்களெல்லாம்

புலனாகின்றன; ஆனால் ஒரே ஒரு அதிசயம் மட்டும் புலப்படுவதில்லை; அதுதான், உயிருள்ள மனிதனின் வாழ்வில், அவனுடைய உணர்ச்சிகளோடு நேரடிக் தொடர்பு கொண்டிருக்கிற பொருள்களைப்பற்றிய அதிசயமாகும்!

ஆனால், நாணயமான மனிதர்கள், தாங்கள் எல்லாம் அறிந்திருப்பதாகப் பாசாங்கு செய்வதில்லை; அவர்கள் உண்மையாகவும், வெளிப்படையாகவும் பேசக்கூடியவர்கள்; அவர்கள் உண்மையை விரும்புகிறவர்கள்; அவர்கள் தங்கள் அறியாமையை நாணயத்தோடு ஒப்புக்கொள்கிறவர்கள்; "நாங்கள் அதனை அறியமாட்டோம்" என்று சொல்லிவிடக்கூடியவர்கள்.

இவையெல்லாம் கூர்ந்து பார்மின்; நாம் ஏன் அறியாமையை வணங்கவேண்டும்? 'அறிய முடியாத ஒன்று'க்கு நாம் ஏன் முழங்காற்படியிட்டுக்கிடக்கவேண்டும்? ஊகித்துக்கொண்ட ஒரு பொருளின் முன்னால் நாம் ஏன் வீழ்ந்து கிடக்கவேண்டும்?

கடவுள் இருக்கிறார் என்றால், அவர் நல்லவர் என்றும், அவர் நமக்காகக் கவலை கொள்கிறார் என்றும் நாம் எப்படி அறிவது? கடவுள், அறிவாளியாகவும் நல்லவராகவும், எல்லையற்ற காலந்தொட்டு இருந்துவருகிறார் என்றும், அவர் எப்பொழுதும் இருக்கிறார் என்றும், அவர் இனியும் எல்லையற்ற காலம் வரையில் இருப்பார் என்றும் கிருஸ்தவர்கள் கூறுகிறார்கள். இந்தக் கடவுள் தம் கடவுள் தன்மையை அகற்றிவிட்டு வாழக்கூடியவரா? அவர், தம்முடைய நல்ல தன்மையை அகற்றிவிட்டு வாழக்கூடியவரா? அவர், தம்முடைய விருப்பமோ, குறிக்கோளோ அற்ற தன்மையில், அறிவாளியாகவும், நல்லவராகவும் வாழக்கூடியவரா?

எல்லையற்ற காலந்தொட்டு அவர் உண்டாக்கப்பட்டதேயில்லை. அவர் காரணங்களுக்கெல்லாம் பின்னால் நின்றவர். அவர் மாற்றம் அடையாதவராக, மாற்றம் அடையப்படாதவராக இருந்தார்; இருக்கிறார்; இருப்பார். அவர் அவருடைய பண்பை உண்டாக்கவோ அல்லது வளர்க்கவோ வேண்டிய அவசியமில்லை; அது போலவே அவருடைய உள்ளத்தை வளர்க்க வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. அவர் முன்பு எப்படி இருந்தாரோ அப்படித்தான் இப்பொழுதும் இருக்கிறார்; அவர் முன்னேற்றம் எதனையும் காட்டவில்லை. அவர் இப்பொழுது எப்படியிருக்கிறாரோ, அப்படித்தான் இனியும் இருப்பார்; மாற்றம் எதனையும் அவர் காணப்போவதில்லை. பின் ஏன் அவரைப் புகழவேண்டும் என்று, நான் கேட்கிறேன்? முன்பு எப்படி இருந்தாரோ, இப்பொழுது எப்படியிருக்கிறாரோ அவற்றினின்றும் அவர் வேறுபாடுடையவராக இருக்கமுடியாது. அவர் மாறப்போவதில்லை; நாம் ஏன், அவரை, வழிபாட்டுரை கூறி வணங்கவேண்டும்?

அப்படியெல்லாம் இருந்தும், கடவுள் தவறு செய்யமாட்டார் என்று கிருஸ்தவர்கள் கூறிக்கொள்கிறார்கள்!

சாத்தான்மீது சுமத்தப்படும் மிகச்சாதாரணமான குற்றச்சாட்டு என்னவென்றால், அவன் மக்களாகிய குழந்தைகளுக்கு ஆசை வார்த்தை காட்டி அழைத்துச் சென்றான் என்பதாகும். அப்படியிருந்தும், கடவுளின் வழிபாட்டுரையில், கடவுள் பிசாசுகளின் அரசன் போல் நடந்துகொள்ளக்கூடாது என்று, அவமானப்படும் முறையில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

"ஆசைகளில் எம்மை இழுத்துச் செல்லாதீர்" என்று வழிபாட்டுரையில், கேட்டுக்கொள்ளப்படுகிறது!

புகழ்ச்சியைக் கடவுள் ஏன் விரும்பவேண்டும்? அவர் ஒரு பொழுதும் ஒன்றையும் கற்றுக்கொண்டதில்லை; தன்னலத்தை மறந்து வாழும் தன்மையை அவர் ஒருபொழுதும் பழக்கப்படுத்திக் கொண்டதில்லை; அவர் ஆசைக்கு அகப்பட்டதில்லை; அச்சத்தாலோ அல்லது விருப்பத்தாலோ அவர் தொடப்பட்டதில்லை; அவருக்குத் தேவை எப்பொழுதும் ஏற்பட்டதில்லை! பின்னர், ஏன் அவர் நமது புகழ்ச்சியை விரும்பவேண்டும், கேட்க வேண்டும்?

இந்தக் கடவுள் இருக்கிறார் என்பதையோ, வழிபாட்டுரையைக் கேட்டார், அதற்குப் பதிலிறுத்தார் என்பதையோ எவனொருவனாவது அறிவானா? அவர் இந்த உலகத்தைக் கட்டி ஆளுகிறார், மக்களின் நடவடிக்கைகளில் அவர் தலையிடுகிறார், அவர் நல்லவர்களைக் காப்பாற்றுகிறார், அவர் கெட்டவர்களைத் தண்டிக்கிறார் என்பதெல்லாம், மக்களால் அறியப்பட்டவை

களா? இதற்கான சான்று மனிதசமுதாய வரலாற்றில் காணமுடியுமா? கடவுள் இவ்வுலகத்தை ஆளுகிறார் என்றால், நல்லதுக்கெல்லாம் நாம் அவரைக் காரணமாக்குவானேன்; இதே நேரத்தில் தீதுக்கெல்லாம் அவரைக் குற்றஞ் சாட்டாமலிருப்பானேன்? இந்தக் கடவுளை ஒப்புக்கொள்வதற்காக, நாம் நல்லதை நல்லது என்று சொல்லவேண்டும், தீமையும் நல்லது என்று சொல்லவேண்டும்! எல்லாம் கடவுளாலேயே இயங்குகின்றன என்றால், அவருடைய செயல்களுக்குள்ளே நாம் வேற்றுமைகளைக் கற்பிக்கக்கூடாது; எல்லையற்ற பேரறிவு படைத்த, எல்லாம்வல்ல, நல்ல தன்மை கொண்ட கடவுளின் செயல்களுக்குள்ளே நாம் வேற்றுமைகளைக் கற்பிக்கக்கூடாது! கதிரவனின் ஒளியையும் அறுவடையையும் கொடுப்பதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோம் என்றால், பிளேக்கையும் பஞ்சத்தையும் கொடுப்பதற்காகவும் நாம் நன்றி செலுத்தத்தானே வேண்டும்! அவர் அளிக்கும் விடுதலைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோம் என்றால், அடிமை, தன்னுடைய விலங்கு பூட்டப்பட்ட கைகளை உயர்த்திக், கடவுளை வணங்கித், தன்னுடைய உழைப்பிற்குக் கூலி கொடுக்காததற்காகவும், சாட்டையடியால் முதுகில் தழும்புகள் ஏற்றுக்கொண்டதற்காகவும், கடவுளுக்கு நன்றி செலுத்தத்தானே வேண்டும்! நாம் வெற்றிக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோம் என்றால், தோல்விக்காகவும் நாம் நன்றி செலுத்தத்தானே வேண்டும்!

இப்பொழுதுதான் சில நாட்களுக்கு முன்பு, நமது குடியரசுத் தலைவர், சாண்டியாகோ என்ற இடத்தில் நமக்கு வெற்றி கிடைத்ததற்காக, ஒரு பிரகடனத்தின் மூலம், கடவுளுக்கு நன்றி செலுத்திக்கொண்டார். மஞ்சள் காய்ச்சல் என்ற நோயை அனுப்பி வைத்ததற்காக, அவர் கடவுளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளவில்லை. பொருத்தமான முறையில் பார்க்கப்போனால், நமது குடியரசுத் தலைவர், இரண்டு செயல்களுக்காகவும் சமமான அளவில், கடவுளுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டாமா!

உண்மை என்னவென்றால், நல்ல—தீய ஆவிகளும், கடவுள்களும் பூதங்களும் மனித அனுபவத்திற்கு மிக அப்பாற்பட்டவைகளாகும்; நமது எண்ணங்களின் எல்லைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவையாகும்; நமது சிந்தனைக்கு மிக அப்பாற்பட்டவையாகும்.

மனிதன் சிந்திக்கவேண்டும்; அவன் அவனுடைய புலனுணர்ச்சிகளை யெல்லாம் பயன்படுத்தவேண்டும்; அவன் ஆராய்ச்சி செய்யவேண்டும்; அவன் பகுத்தறிந்து பார்க்கவேண்டும். சிந்திக்கத்தெரியாத மனிதன், மனிதனைவிட மிகத் தாழ்ந்தவனாகிறான்; சிந்திக்க மறுப்பவன், அவனுக்குத்தானே துரோகியாகிறான்; சிந்திக்க அஞ்சுபவன், மூடநம்பிக்கையின் அடிமையாகிறான்!

★★

எவ்வளவு நட்சத்திரங்களை நாம் பார்க்கிறோம்?

நன்றாக இருண்டதோர் இரவில், வானத்தைப் பார்த்தால் நட்சத்திரங்கள் பரவிக்கிடப்பதைக் காண்கிறோம். வான வெளியெங்கும் நட்சத்திரங்கள் மின்னுகின்றன. அவ்வாறு நாம் பார்க்கும் பொழுது, அவற்றின் எண்ணிக்கை கணக்கிலடங்காதது என்றுதான் தோன்றும். எண்ணிக்கையில் அடங்காதவாறு, எங்கும் நட்சத்திரங்கள் மொய்த்திருப்பதுபோலத் தெரிகிறது.

ஆனால் நாம் கண்ணால் (டெலஸ்கோப்பின் உதவியில்லாமல்) பார்க்கக்கூடிய நட்சத்திரங்களின் தொகை 9000 ஆகும். அதுவும் கண்பார்வை நன்றாயிருந்தால். ஆனால் இந்த நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே சமயத்தில் நமக்குத் தெரியாது. எல்லாப்பக்கத்திலும் நட்சத்திரங்கள் பரவியிருப்பதால், இரவு நேரத்தில் ஒரு பாதி நட்சத்திரக் கூட்டத்தை மட்டும்தான் நாம் பார்க்கிறோம். ஆதலால் மொத்தம் 9000-ல் சரிபாதியான 4500 நட்சத்திரங்கள் நமது கண்களுக்கு ஒரு சமயத்தில் தெரியும். ஆனால் அடிவானத்துக்குப் பக்கத்தில், புகை, பனிப்படலம் இவைகளால் சில மறைக்கப்பட்டது போக, சுமார் 4000 நட்சத்திரங்களைத்தான் நாம் ஒரு சமயத்தில் பார்க்கமுடியும்.

இந்தக் கணக்கு மேகங்களெதுவும் இல்லாமல், களங்கமற்ற இரவில், பார்க்கக்கூடியதாகும். சாதாரணமாக மேகங்கள் மூடினாலும், நிலவொளி பிரகாசமாக இருந்தாலும் நட்சத்திரங்கள் குறைந்து தெரியும்.

சிறுகதை

காதற் கடிதம்

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பண்ணை பக்கிரிசாமிப் பிள்ளை அழைத்துவரச் சொன்னார் என்று வேலையாள் கூப்பிட்டதும், மேகநாதன் திகில் கொண்டான். இதுவரை அவன் பட்ட வேதனையெல்லாம் ஊரார் செய்த கேலி கண்டு. இப்பொழுதோ பண்ணையார் கூப்பிட்டனுப்பியிருக்கிறார், அது நிச்சயமாகக் கேலிக்காக இருக்காது. பக்கிரிசாமிப் பிள்ளை கோபப்பட்டார் என்றால், அது எந்தப் பயங்கர அளவுக்கும் போய் நிற்கக்கூடும். அவருடைய கோபத்துக்குமுன் ஊரைவிட்டோடியவர்கள், வாழ்வு உருத்தெரியாமல் சிதைக்கப்பட்டவர்கள் ஏராளம். முரட்டு சுபாவமும், அதைத் தாங்கக்கூடிய அளவுக்கு அதிகாரமும், பலமும் பக்கிரிசாமிப் பிள்ளையிடம் இருந்தன. எனவே அவர் முன் செல்ல எவரும் அச்சப்படுவார்கள். அதிலும் மேகநாதன் இயல்பாகப் பயந்த சுபாவமுள்ளவன், அதிலும் ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு, அவர்முன் செல்வது என்றால், மிகவும் திகில் கொண்ட நெஞ்சுடன் அவன் புறப்பட்டான். வேலையாட்கள்—அவர்களைப் பார்த்தால், ஆளை மிரட்டி அழைத்துப் போகவந்த அடியாட்கள் மாதிரியே இருந்தது. அவர்கள் மட்டும் கொஞ்சம் அனுமதி கொடுத்தால் போதும், மேகநாதன் அப்பொழுதே ஓடியிருப்பான், எல்லாவற்றையும் விட்டு.

அவன் தங்கியிருந்த இடத்திலிருந்து, பண்ணையார் பங்களா சிறிது தூரத்தில்தான் இருந்தது. அந்த இருநூறு அடி தூரத்தைக் கடந்து போவதற்குள், ஏதோவொரு பயங்கரக் காட்டுக்குள் காததூரம் நடந்து போவதுபோலிருந்தது. காட்டில் நடப்பவனுக்கு நரியின் ஊளையும், ஆந்தையின் அலறலும் கேட்கும்பொழுதும், சிறிது அச்சமூண்ட பொழுதிலும், ஆபத்து விளையுமென்று திகிலடைவதில்லை. ஆனால் மேகநாதன் நடந்துசென்றது, புலியின் குகையை நோக்கி.

தோட்டத்தில், பக்கிரிசாமிப் பிள்ளை உலவிக்கொண்டிருந்தார், அதிலும் இரைதேடி, பசியுடன் இருக்கும் புலியைப்போல. முறுக்கிவிட்ட மீசையுடன், உருட்டிவிட்ட விழிகளுடன் அவர் மேகநாதன் வரவை எதிர்பார்த்துதான் இருந்திருக்கவேண்டும். அவர் முகத்தில் கோபம் கொப்பளித்துக்கொண்டிருந்தது. மேகநாதன், பங்களா வாசற்படியைக் கடந்து தோட்டத்தில் அவரிருந்த இடம் வந்தான். இதற்குமுன் இவ்வளவு அருகாமையில் அவன் பண்ணையார் அருகில் நின்றதில்லை. அந்த தோட்டத்திற்குள்—அவனுடைய 'காதலி' உறைகிற அந்த மாளிகைக்கு அவ்வளவு அருகில் அவன் நின்றதில்லை. மேகநாதன் வந்து சேர்ந்ததும், உலவிக்கொண்டிருந்த பக்கிரிசாமி பிள்ளை நாற்காலியில் உட்கார்ந்து, கண்ணாடியைத் தளர்த்திக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தார். அவனுடன் வந்த வேலையாட்கள், அவனை விட்டு விலகிச் சற்று தூரத்தில் போய் நின்றுகொண்டார்கள். மேகநாதன் மட்டும் தனியாக—இந்த உலகிலேயே தனியாக அங்கு நின்றான்.

மேகநாதனை அழைக்கச் சென்ற ஆட்களில் ஒருவன், தான் வைத்திருந்த கட்டு ஒன்றை பக்கிரிசாமிப் பிள்ளைமுன் போடப்பட்டிருந்த மேஜையின்மேல்பிரித்துவைத்தான். மேகநாதன் எழுதிய காதற் கடிதங்கள் அனைத்தும் விழுந்தன. அந்தக் கடிதங்களைப் பார்த்ததும்—அவன் எழுதிய கடிதங்கள், அவற்றைப் பார்க்க வேறெவருக்கும் உரிமைகிடையாது—மேகநாதன் ஓடி முன்வந்தான், அவற்றை எடுத்துக்கொள்ள. பண்ணையாரின் கோபப்பார்வை, அவனை அப்படியே நிறுத்திவிட்டது. முன்

கிடந்த கடிதங்களில் ஒன்றை எடுத்துப், பக்கிரி சாமிப் பிள்ளை படிக்கத்தொடங்கினார்.

மேகநாதன் பதைபதைத்தான், தன்னெதிரிலேயே அவர் ஒரு கடிதத்தை எடுத்துப் படிப்பதைப்பார்த்து. அவனால் எதுவும் செய்யமுடியாத நிலை. வேதனையுடன், சுற்றிலும் பார்த்தான். தூரத்தில், வீட்டுப் படிக்கட்டுகளின் மீது. அவள்-குமுதா உட்கார்ந்திருந்தாள், முகவாயைக்கையால்தாங்கிக்கொண்டு. அவளுடைய அழுத முகம், சிவந்து விளங்கியது. அவளும் மேகநாதன் நிற்பதைப் பார்த்தாள், அவளுடைய கண்களில் வெறுப்பும், கோபமும் ஒளிவிட்டன. மேகநாதன் வேறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

சுரீல் என்ற தாக்குதல்—சவுக்கின் முனை அவன் கன்னத்தில் விழுந்து, அவன் முகத்தைத் திருப்பியது. கடிதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பக்கிரிசாமிப் பிள்ளை, கோபம் அதிகரித்து, பக்கத்திலிருந்த குதிரைச் சவுக்கை எடுத்துச்சுழற்றிவிட்டார். அது, மேகநாதனின் உடலை வளைத்து, கன்னத்தில் விழுந்தது. வலி தாங்காமல், மேகநாதன் கன்னத்தில் கைவைத்தான், அங்கு இரத்தம் கசிந்தது.

பண்ணையார் உறுமிக்கொண்டு நின்றார். "என்னடா இது! கண்ணே! மணியே! குமுதமே! எழில் அமுதமே!" கடிதத்தைக் கசக்கிப்போட்டு, "காதலாம்! கடிதமாம்! கதிகெட்ட பெண்களிடம் பேசுகிறதுபோல, கண்ட கண்டபடி எழுதுகிறதோ! போடா; மூடா!" என்று மறுபடியும் சவுக்கைச் சுழற்றினார். அடி விழுந்ததுகூட தெரியாமல், உணர்வு குன்றி மேகநாதன் நின்றான். அவன் சிவந்த முகம் திடீரென்று வெளிறிட்டுப் போயிற்று.

பக்கிரிசாமிப்பிள்ளை தன் கையிலிருந்த சவுக்கால் கடிதங்களைக் கீழே தள்ளினார். கையால் தொடுவதற்குக்கூட அருவருப்பாகத் தோன்றியது. "டேய்! இவற்றைக் கொண்டுபோய் அடுப்பில் போடு!" என்று உத்தரவிட்டார். வேலையாள் கடிதங்களைப் பொறுக்கினான். எதிரே நின்றுகொண்டிருந்த மேகநாதனைப் பண்ணையார் மிகுந்த ஏளனத்துடன் உற்றுப் பார்த்தார். அவனை அடிப்பதும் வீண்வேலை என்று தோன்றியது. "நாயே! என் முன் நிற்காதே ஓடிப்போ!" என்று சவுக்கைக் கீழே போட்டுவிட்டு வீட்டிற்குள் திரும்பிச் சென்றார். போகும்பொழுது வழியில் குமுதாவைப் பார்த்து, "அழாதே, அம்மா! வா, போகலாம்!" என்று கூப்பிட்டுவிட்டுச் சென்றார். குமுதா தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு, எழுந்தாள். அடுப்பில் போடவேண்டிய கடிதங்களை வேலைக்காரன் ஒரு குப்பைக் கூடையில் எடுத்துவந்தான். அதை வாங்கிக் கொண்டு, குமுதா உள் சென்றாள்.

மேகநாதன் திரும்பினான். உலகமே அவனுக்கு எதிராகத் திரும்பியிருப்பதுபோலத் தோன்றியது. காதல் பாதை கரடு, முரடாக இருக்குமென்பார்கள். ஆனால் மேகநாதனுடைய காதல் பாதையோ, திடீரென்று உருட்டிவிடுகிற மலைச்சரிவாக இருந்தது. தனது பனியென்ற மலையுச்சியில், கனவு என்ற மேகங்களிடை அவன் உலவினான்- திடீரென்று தோன்றிய புயல் அவனை உருட்டியது. மடுவின் ஆழத்துக்குத் தள்ளப்பட்டு, பாறைகள்மீது மோதி, வேதனைப்பட்டான்.

பண்ணையார் பங்களாவைவிட்டுத் திரும்பிப் போகிற வழியில், அருணாசலம்—மேகநாதனின் காதற் கடிதங்களை முதலில் 'கண்டுபிடித்தவன்'—சந்தித்தான். கடிதங்களை அவன் கண்டுபிடித்தது இவ்வளவு ஆபத்துக்களை மேகநாதனுக்கு உண்டாக்குமென்று தெரியாது. முதலில் வேடிக்கையாக இருந்தபோதிலும், இப்பொழுது பண்ணையாரிடம் 'பரிசு' பெற்றுத் திரும்பும் மேகநாதனைப் பார்க்கும்பொழுது மிக வருத்தமாக இருந்தது. சிறிது தூரம் மேகநாதனுடன் நடந்துவந்த அருணாசலம் தயக்கத்துடன், "மேகநாதா! என்னை மன்னித்துவிடு!" என்று வருத்தத்துடன் சொன்னான். முதலில் மேகநாதனுக்குச் சிறிது கோபம் வந்தது. இனிக் கோபப்படுவதில் அர்த்தமில்லை. எல்லாம் நடந்துவிட்டது. "உன்மீது ஒன்றும் குற்றமில்லை!" என்று சொல்லிவிட்டு மேகநாதன் பிரிந்தான்.

மேகநாதன் தன் அறைக்குள் நுழையும் பொழுது—அது அவன் விட்டுச் சென்ற பொழுது வைத்தபடியே திறந்துகிடந்தது—நன்றாக இருட்டிவிட்டது. சாமான்கள் அலங்கோலமாகக் கிடந்தன. மேகநாதன் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே உட்கார்ந்தான். அவன் தோளிலும், முதுகிலும் சவுக்குப்படிந்த வீக்கம் இருந்தது. கன்னத்தில் இரத்தம்

கசிந்து, காய்ந்திருந்தது. கன்னத்தில் கை வைத்ததும், வலி தெரிந்தது. அந்த வலி, ஒருவகை ஆறுதலைத் தந்தது, தான் செய்த குற்றத்துக்குத் தக்க தண்டனை பெற்றதாகவே மேகநாதன் நினைத்துக்கொண்டான்.

ஜன்னலோரத்தில் வந்து அவன் நின்றான். காற்று லேசாக அடித்தது. அடிவானத்திற்கு மேல் சற்றுத் தேய்ந்த மதி எழுந்துகொண்டிருந்தது. ஆனால் வானமும், நிலவொளியில் பரந்துகிடந்த உலகமும் மேகநாதனின் கண்களுக்கு வெறிச்சென்றிருந்தது. வீசுகின்ற தென்றலில் இசையில்லை, புலம்பலொலிதான் கேட்டது.

வரண்ட பாலைவனத்தில் அவன் நடந்துகொண்டிருப்பதுபோலத் தோன்றியது. தூரத்தில் ஒரு குளிர்ந்த பூஞ்சோலை, அதன் நடுவில் ஒரு சிறு நீரோடை கண்ணுக்குத் தெரிகிறது. ஆவலுடன் அருகில் ஓடுகிறான். ஆனால் பூஞ்சோலைக்குள் செல்லவிடாது, அங்குள்ள ஒருவன் தடுக்கிறான். மற்றவர்கள் மணலைவாரி அவன்மீது தூற்றுகிறார்கள். அனற்காற்றும், மணற்காற்றும் அவன்மீதுதாக்க, அவன் வெளியேறுகிறான்.

“உலகம் பாலைவனத்தைப் போலத்தான் இருக்கிறது” என்று மேகநாதன் முணுமுணுத்துக்கொண்டான். ஆனால் உலகத்தின்மீது, ஊர்மீது அவன் என்ன பழிச்சொல் வீசினாலும், ஊரார் அவன்மீது வீசவேண்டிய ஏளனத்தை வீசிவிட்டார்கள். காலையிலிருந்து அவன் கேட்டவைகள், மீண்டும் அவன் காதில் ஒலித்தன. ஒரே சமயத்தில் வெற்றிலைப்பாக்குக் கடைக்காரன், பேப்பர் விற்பவன், கடைவீதியில் நிற்பவன், கனபாடியுடன் வருபவன் அனைவரும் மேகநாதன்முன்நின்று பேசத்தொடங்கினார்கள். கடைசியாகப் பண்ணையாரின் கோபப் பார்வை அவன் உள்ளத்தை உலுக்கியது. அங்கு அழுத கண்களுடன் உட்கார்ந்திருந்த குமுதாவின் கவனமும் அவனுக்கு வந்தது.

தனது அசட்டுத்தனத்தால், குமுதாவின் மீது மக்களின் கவனம் திருப்பப்பட்டதை மேகநாதன் உணர்ந்து வருந்தினான், அவனையும், அவனுடைய காதற்கடிதங்களையும் பற்றிப் பேசுபவர்கள், குமுதாவைப் பற்றிக் குறிப்பிடாமலிருக்கமுடியாது. ஆனால் குமுதாவுக்கு உயர்தர அந்தஸ்தும், ஊராரால் போற்றப்படுகிற குணமும் இருந்ததால், அவள்மீது பழியேதும் தொடரவில்லை. மாறாக, அவள்மீது பழிவரும் வகையில் நடந்துகொண்டதற்காக, மேகநாதன்மீதுதான் அவர்களுக்கெல்லாம் கோபம் வந்திருக்கும். அதிலும், கடைசியாகக் குமுதாவைப் பார்த்தபொழுது, அவள் அழுத கண்களுடன் காணப்பட்டது மேகநாதனின் உள்ளத்தைத் தாக்கியது. அதற்காக என்ன தண்டனை யேற்றாலும் சரியாகாது என்று மேகநாதனுக்குத் தோன்றியது. இரவு முழுவதும், தூக்கம் பிடிக்காமல், அந்த இருட்டு அறையில் அவன் உலவிக்கொண்டிருந்தான்.

காலையில், வெளிச்சம் வந்து, தெருவில் நடமாட்டம் அதிகரித்து, சத்தம் வந்ததும்தான், ஊரைப்பற்றி ஞாபகம் வந்தது. நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் அந்த ஊரில் நடமாடுவதென்பது முடியாத காரியம். உடல் நலமில்லாத காரணத்தால், வேலையைத் தான் விட்டு விலகிவிடுவதாக மேகநாதன் ஒரு ராஜிநாமாக் கடிதத்தை எழுதிவைத்தான். மற்றபடி ஊரைவிட்டுப் போவதற்கு வேண்டியவற்றையெல்லாம் செய்தான். கொடுக்கவேண்டிய பாக்கிகளைக் கணக்கிட்டுச் சரிசெய்துவிட்டு, தன் மூட்டை முடிச்சுகளைக் கட்டித் தயாராகிவிட்டான். ஆனால் அவன் ஊரைவிட்டுப் போகப்போகிறான் என்பது யாருக்கும் தெரியாது. அன்று முழுவதும் அவன் யாரிடமும் பேசவில்லை, எதுவும் சொல்லவில்லை.

மாலை நான்கு மணிவரை அறைக்குள்ளேயே மேகநாதன் அடைபட்டுக் கிடந்தான், வெளியில் சென்றவர்களெல்லாம் திரும்பிவருகிற நேரமாதலால், அவர்கள் யாரையும் சந்திக்க விரும்பாமல், மேகநாதன் வெளியில் சென்றான். இரவு எட்டுமணிவரை எங்கேயாவது தனியாகச் சுற்றிக்கொண்டிருந்துவிட்டுச் சென்றால், ஒன்பது மணி ரயிலுக்குக் கிளம்புவதற்குச் சரியாயிருக்கும், அதிக நடமாட்டம் இல்லாத இடமாக, எதேச்சையாக, அவன் நடந்து சென்றுகொண்டிருந்தான். கடைசியாக, அவன் கண்விழித்துச் சுற்றிலும் பார்த்தபொழுது, அவன் வழக்கமாக வருகிற மாந்தோப்பில் இருந்தான். ஒருகணம் திடுக்கிட்டான், யாராவது பார்த்தால்? பார்த்தால்தான் என்ன, இனிமேல் என்ன செய்யப்போகிறார்கள்? அந்த ஊரில், அவன் கழிக்கவிருக்கிற கடைசி மாலைப் பொழுது, அவனிஷ்டப்படி இருந்துவிட்டுப்

போவதுதானே? எப்பொழுதும் அவன் உட்காருகிற இடத்தில், உட்கார்ந்தான். அந்த இடத்தில் அமர்ந்ததும், ஒருகணம் தனக்கு நிகழ்ந்த வேதனைகளை யெல்லாம் மறந்துவிட்டான். மணலில் கோடுகளைப் போட்டவண்ணம் மனத்திரையில் எண்ண ஓவியங்களை மீண்டும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தான். மெதுவாக அவன் மனம் நிம்மதியடைந்து, பழைய கனவுகள் வந்தன. தூரத்தில் குமுதா வருவது போலிருந்தது. சே! என்ன மீண்டும்...என்று கையைத் துடைத்துக்கொண்டு எழுந்தான். எதிரே கண்ட காட்சி, அவனால் நம்பவே முடியவில்லை. குமுதா—உண்மையான குமுதா தோட்டத்தினுள் வந்துகொண்டிருந்தாள்!

அவள்தான் கடைசிப் பெயராக இருக்க முடியும், அவன் சந்திக்க விரும்புகிறவர்களில்! அவளைப் பார்க்கும்பொழுதுதான், தன் தீங்கின் அளவு மேகநாதனுக்குத் தெரிந்தது. பாவம்! கண்டவர்களின் வெட்டிப் பேச்சுக்கு ஆளாக்கிவிட்டதால், அவள் வேதனையடைந்திருக்கிருளென்று தெரிந்தது. அவளுக்குத் தெரியாமல், மாந்தோப்பை விட்டு வெளியேறி விடவேண்டுமென்று தோன்றியது. ஆனால் அவனிருப்பதை அவள் பார்த்துவிட்டாள். அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லைபோலும்! அந்தத் தோப்பு அவர்களுடையது, அதனால் வந்திருக்கிருள் சுற்றிப்பார்க்க!

மேகநாதன், அவளை நேரில் பார்த்துவிட்டதும், கடைசி முறையாக அவளிடம் மன்னிப்புப் பெறவேண்டுமென்று தோன்றியது ஆனால் ஒன்றும் பேசாமல், அவளைக் கடந்து போக நினைத்தான், கடைசியாகத், தன் குரலைச் சரிசெய்துகொண்டு "என்னை மன்னித்துவிடுங்கள்!" என்று கேட்டுக்கொண்டான். அவன் செய்த குற்றத்துக்கு மன்னிப்பு—யார்மீது பழி சூழ்ந்ததோ அவளிடமிருந்து மன்னிப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கமுடியாது. அவள் அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல், அலட்சியமாக திரும்பி நின்றுள். அப்படி அலட்சியமாக அவள் நிற்பதிலும் ஒரு தனியழகு இருக்கிறது!

"இந்த மாந்தோப்பு, அப்படியொன்றும் அழகாக இல்லையே, மயில் ஆடுகிறது, குயில் கூவுகிறது என்று வர்ணித்தபடி! நாங்கள் மாஞ் செடிகளை வளர்த்தோமே தவிர, மயில், குயில்களை வளர்த்ததாக ஞாபகமில்லை." அவளுடைய கேலி புரியாமலில்லை. பண்ணையார் சவுக்குகொண்டு அடித்தார். அவருடைய மகள் சொல்லைக்கொண்டே அடித்துவிட்டாள்.

தட்டுத் தடுமாறிக்கொண்டு "இல்லை, ஏதோ வேடிக்கையாக எழுதினேன். ஆனால் விபரீதமாகுமென்று எதிர்பார்க்கவில்லை" என்று மேகநாதன் சொன்னுன்.

"நான்கூட எதிர்பார்க்கவில்லை, ஆனால் அந்தக் கடிதங்கள் அழகாக இருந்தன..."

மேகநாதனுக்கு, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சப்படுவதுபோலிருந்தது. அந்த இடத்திலிருந்து எப்படியாவது தப்பித்துக்கொண்டு போனால் போதுமென்றாகிவிட்டது. "ஏதோ தவறுதலாகச் செய்துவிட்டேன். குற்றமொன்றும் நான் நினைக்கவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். உண்மையில்."

"உண்மையில்..."

"அந்தக் கடிதங்களில் கொஞ்சங்கூட உண்மையில்லை. வெறும் வார்த்தைகள்."

"வெறும் வார்த்தைகளா?"

"ஏதோ தவறுதலாக எழுதினேன். இப்பொழுது மனதார வருத்தப்படுகிறேன்."

குமுதா பேசாமல் சுற்றிலும் பார்த்தாள்.

"என்னை மன்னித்து விடுங்கள். இனி என்னால் உங்களுக்கோ, ஊருக்கோ எந்தத் தொந்தரவும் இருக்காது. இன்று இரவே நான் ஊரை விட்டுப் போய்விடுவேன். அப்புறம் எதுவும் இருக்காது". அவனுடைய குரலில் வேதனையும், சோகமும் தோய்ந்திருந்தன.

சிறிதுநேரம் தயங்கிவிட்டு, "நான் போகிறேன், குமுதா!" என்று திரும்பினுன். அவன் சொல்லிய கடைசி வார்த்தை, அவனுக்கேத் திகைப்பைத் தந்தது. ஆனால் தன் பெயரைக் கேட்டதும், குமுதா கோபப்பட்டதாகத் தெரியவில்லை.

அவள் தூரத்தை—கண்காணுத இடத்தைப் பார்த்தபடி பேசினுள். "அந்தக் கடிதங்கள்! நேற்று அவைகளை அடுப்பில் போட்டு எரித்துவிட எடுத்துச்சென்றேன். ஓரிரண்டு கடிதங்களைக் கிழித்து நெருப்பில் போட்டுவிட்டேன். மூன்றாவது கடிதத்தைக் கிழித்துப் போடும் பொழுது, அதிலிருந்த இரண்டொரு

வாக்கியங்களைப் படித்துவிட்டேன். பின் கிழித்த துண்டுகளை இணைத்து, கடிதத்தைப் படித்தேன். பின் மற்றக் கடிதங்களையெல்லாம் படித்தேன்! ஆகா! எல்லாம் எவ்வளவு அழகாக இருந்தன! நீலச்சுடர்மணி வானத்தை, அங்கே நீந்திவரும் முழு மதியை, மதிதரும் குளிர் நிலவை, கோலமிகுந்த சோலையை, மகிழ்ச்சிதரும் சாலையை, பறந்துசெல்லும் வெண்புறுவை, பாடிவரும் வானம்பாடியை, அமைந்திடும் மலர்க்குலத்தை, அதன்மீது ஆடிவரும் தென்றலை, இவைகளையெல்லாம் கண்டேன். கடிதங்களைப் படிக்கும்பொழுது, இனிய யாழிசையைக் கேட்பது போலிருந்தது, எழிலார் ஓவியத்தைப் பார்ப்பதுபோலிருந்தது, திகட்டாத தேனமுதைப் பருகுவதுபோலிருந்தது. அவற்றைப் படிக்கும்பொழுது, எல்லாவற்றையும் நான் மறந்தேன், என்னையே நான் மறந்தேன். அந்தக் கடிதங்கள் உண்மையானால்..."

குமுதா சொல்வது கேட்டு, மேகநாதன் திகைத்து நின்றான்.

"நீங்கள் சொல்வது போல வெறும் வார்த்தைகளாக இல்லாமல், அந்தக் கடிதங்கள் இருந்தால்...."

"இருந்தால்" என்று மேகநாதன் எதிரொலித்தான்.

"நான் பாக்கியசாலிதான்."

"குமுதா!" என்று ஆவலுடன் மேகநாதன் கூவினான்.

இருவரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். பொழுதின் எல்லையும் கழிந்தது. இருவரும் திரும்பினர், மாந்தோப்பைவிட்டு.

ஆற்றங்கரையில் வந்து நின்றதும், எதிரே இருக்கும் ஊர் மேகநாதன் கண்ணுக்குத் தெரிந்தது. இவர்களுடைய காதலை ஊர் ஏற்றுக்கொள்ளுமா? சமூகம் அனுமதிக்குமா? குமுதா உயர்ந்த குடும்பத்தவள். பண்ணையார் வீட்டுப் பெண், மாடிவீட்டில் வாழ்பவள், பெருமையாகப் பேசப்படும் இடத்திலிருப்பவள். மேகநாதனோ பாமரக் குடும்பத்தில் பிறந்தவன், பணம் காசு அதிகமில்லாதவன், வேலை செய்து வயிறு வளர்க்கவேண்டிய ஏழையர் பரம்பரையைச் சேர்ந்தவன். இந்த இரண்டு எதிர்ப்புறங்களுக்கும் உறவு உண்டாகுமா? காதல் ஈடேறுமா? மேகநாதனின் சந்தேகப் பேச்சு, குமுதாவிடம் சிரிப்பையே வரவழைத்தது.

"இதற்காகவா கலங்குவது! பெரிய இடத்தில் பிறந்த பெண்ணென்றால், அவள் நெஞ்சில் காதல் பிறப்பது கூடாது என்று அர்த்தமா? மாடி வீடானாலும், மண்மேடானாலும் காதற் சோலையில் நாம் ஒன்றாகத்தான் நிற்கிறோம். நம்முடைய காதல் உண்மையானதென்றால், இவற்றைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இதோ! பாருங்கள்! நான் சொல்வதில் நம்பிக்கையில்லையா?" என்றாள்.

கடைசியாகப் பிரியும்பொழுது, மறுநாள் மாலை மாலை சந்திப்பதாகக் கூறிவிட்டு, குமுதா போய்விட்டாள். மேகநாதன் அந்த இடத்திலேயே நின்று அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டொருமுறை அவளும் திரும்பிப்பார்த்தாள், கடைசியாக பங்களாவிற்குள் நுழையும்பொழுது கையை உயர்த்தி, ஆட்டிவிட்டுப் போய்விட்டாள்.

கனவுலகில் நடமாடுபவனைப் போல, மேகநாதன் நடந்துவந்தான். இதுவரை என்ன நடந்ததென்றே அவனுக்குப் புரியவில்லை. நடந்தவை கனவா, நனவா என்றும் தெரியவில்லை.

அவர்களிருவரும் பிரிந்து செல்வதைப் பார்த்துவிட்டுப், பின்தொடர்ந்த அருணாசலம் மேகநாதனைத் தாண்டிவந்து, "மேகநாதா! அப்படியானால் எல்லாம் உண்மையானதா? பின் ஒன்றும் இல்லாததுபோல் முன் பேசினாயே!" என்றான்.

"உண்மையாகிவிட்டது" என்று மேகநாதன் நடந்தான்.

இரவு நீண்டநேரம்வரை வெளியில் மேகநாதன் நின்று தூரத்தில் நிலவொளியில் அமிழ்ந்துகிடக்கும் குமுதாவின் மாளிகையைப் பார்த்தபடி நின்றான். நிலாமுற்றத்தில் நின்றபடி, குமுதா நீண்ட கனவுகளைக் கண்டுகொண்டிருந்தாள்.

மேகநாதன் உள்வந்து உட்கார்ந்து, குமுதாவுக்கு அனுப்புவதற்காக ஒரு கடிதத்தை— இந்தத்தடவை உண்மையான ஒரு காதற் கடிதத்தை எழுத பேனாவை எடுத்தான். அப்படியே நீண்டநேரம் உட்கார்ந்திருந்தான். ஆனால் காதற்கடிதத்திற்கு ஒருவரிகூட எழுத அவனுக்கு இப்பொழுது தெரியவில்லை.

வினாவும் விளக்கமும்

திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியும் நட்புறவு பூண்டு செயலாற்றிச் செல்லக்கூடாதா ?

இப்படிப்பட்ட ஐயப்பாட்டை நடுநிலை வகிக்கும், நல்ல எண்ணங்கொண்ட, முற்போக்காளர் சிலர் ஆங்காங்கு கொண்டிருக்கின்றனர். இரண்டு இயக்கங்களும் முற்போக்குக் கொள்கைகளை யுடையனவாய், இடதுசாரிக் கட்சிகளாய் இலங்குகின்ற காரணத்தால், இரண்டும் உறவு கொண்டாடிக்கொண்டு, செயலாற்றிச் சென்றுகொண்டிருந்தால் நல்லதுதானே என்பது அத்தகையோரின் விருப்பம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்கும் கருத்து வேறுபாடு சிறிய அளவில் உண்டு என்றாலும், கருத்து ஒற்றுமை பெரும் அளவில் நின்று நிலவுவதற்கான வழிவகைகள் பல உண்டு என்பது அத்தகு நடுநிலையாளரின் எண்ணம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இறந்தகால நடவடிக்கைகளையும், போக்கினையும் கூர்ந்து கவனித்தால், திராவிட முன்னேற்றக் கழகம் அதே எண்ணத்தில்தான் பணியாற்றிவந்தது என்பதை யாவரும் நன்கு உணரலாம்.

திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட்டுகளுடன் அரசியல் முறைப்படி நட்புறவு கொள்ளவும், நேசக்கரத்தை நீட்டவும் எப்பொழுதெல்லாம் வாய்ப்பு ஏற்பட்டதோ, அப்பொழுதெல்லாம் முயன்றுவந்திருக்கிறது. நட்புறவுக்கான சூழ்நிலைகளை நல்ல எண்ணத்துடனும், மனமகிழ்ச்சியுடனும் ஏற்படுத்தவும், கம்யூனிஸ்ட்டுக் கட்சியைத் தூய உள்ளன்போடு விரும்பவும் ஆன முறைகளில் முன்னேற்றக் கழகம் பாடுபட்டுவந்தது என்பதை நடுநிலையாளர்கள் யாரும் மறுக்கமுடியாது. ஆனால் கம்யூனிஸ்ட்டுகளின் எண்ணமும், போக்கும் தாம் நட்புறவைக் கெடுத்துவந்ததோடு, இன்றைய நிலையிலும் கெடுத்துவருகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி கண்டு பொறாமைப்படுவதும், அதன் செல்வாக்கு கண்டு வயிற்றெரிச்சல் கொள்வதும், அதனை ஆங்காங்கு விழுங்கப் பேராசைப்படுவதும், கழகத் தோழர்களைத் தனித்தனியாகக் கண்டு இல்லாதது பொல்லாதது புனைந்துகூறிச், கழகத்தைப் பிளவுபடுத்தி அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலுவதும், கழகத்தின் கொள்கைகளைப் புரிந்துகொள்ள மறுப்பதும், அவற்றைத் திரித்துக்கூறத் துணிவதும், ஏற்றுக்கொள்ளத் தயங்குவதும், எதிர்த்துக் கூறத் துணிவதும் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் பண்புகளாக இருந்துவருகின்றன. இத்தகைய பண்புகள்தாம், கழகம் கொண்டிருந்த நட்புறவு கொள்ளும் மனப்பான்மையையும், நேசக்கரம் நீட்டும் போக்கினையும் நாளடைவில் நிறுத்திக் கொள்ளும்படியான நிலைமைக்குக் கழகத்தைக் கொண்டுவந்துவிட்டன.

கம்யூனிஸக் கொள்கைகளைத் தாங்கிக்கொள்ளும் திறம் கழகத்திற்கு உண்டு; ஆனால் கழகக் கொள்கைகளைத் தாங்கிக்கொள்ளும் திறம் கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்கு இல்லை. இதன் பொருள் என்னவென்றால் கழகத்தின் கொள்கைக்குள் கம்யூனிஸம் புதைந்துகிடக்கிறது; ஆனால் கம்யூனிஸத்தோடு கலந்துகிடக்கும் திராவிடத்திற்கு ஏற்ற கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் அறிவோ, தாங்கிக்கொள்ளும் ஆற்றலோ கம்யூனிஸ்ட்டுக் கட்சியினிடத்திலில்லை என்பதாகும். என்றாலும் பொதுவான கொள்கை ஒற்றுமையின் காரணமாகக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியுடன் நட்புறவு கொள்ளவே கழகம் விரும்பிற்று. கழகம் கம்யூனிஸ்ட்டுக் கட்சியுடன் கொள்ள நினைத்த நட்புறவு தூய எண்ணத்தின் அடிப்படையிலாகும்; ஆனால் கம்யூனிஸ்ட்டுக் கட்சி சூது, சூழ்ச்சி, வஞ்சகம், பொய், புனைசுருட்டு ஆகியவற்றின் அடிப்படையில் நின்றே நட்புறவு கொள்ள நினைத்து வந்தது—நினைத்து வருகிறது. கழகத்தின் ஆதரவையும், உதவியையும் பெறுவதால் தனக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்று

கம்யூனிஸ்ட்டுக் கட்சி கணக்கு போடுமேயல்லாது, இரண்டும் சம அந்தஸ்தில் வளருமா, நாட்டிற்கு நலம் ஏற்படுமா என்பதைப்பற்றியெல்லாம் அது கணக்குப்போடுவதேயில்லை. "எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டுவருகிறாய்; உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுப்பாய்?" என்ற கருத்தின் அடிப்படையில்தான், கம்யூனிஸ்ட்டுக் கட்சி, பிற கட்சிகளோடு உறவு கொள்ள எப்பொழுதும் முயன்றுவந்திருக்கிறது; முயன்று வருகிறது.

கம்யூனிஸ்ட்டுக் கட்சியோடு நட்புறவு கொள்ளும் சூழ்நிலைக்கான எண்ணமும், போக்கும் கம்யூனிஸ்ட்டுக் கட்சியிடம் இல்லாததால், கழகம் தன்னுடைய உறவை நிறுத்திக்கொண்டது. உறவை நிறுத்திக்கொண்டாலும், கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் கொள்கைகளோடு மோதிக்கொள்வதையோ, கம்யூனிஸ்ட்டுக் கட்சியைக்காட்டிக்கொடுப்பதையோ கழகம் விரும்பியதில்லை. ஆனால் கம்யூனிஸ்ட்டுக் கட்சி கழகத்தைப் பொறுத்து அந்த இரண்டினையும் செய்யத் தயங்குவதில்லை.

தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணையில் இருக்கும்போது, புதுக்கிராமம் கலவரத்தினைத் திராவிட முன்னேற்றக் கழகந்தான் செய்தது என்றும், அதனைக் கண்டிக்கத் தாம் விரும்புகிறோம் என்றும், கம்யூனிஸ்ட்டுக் கட்சியார் அறிக்கைவிட்டனர், தாங்கள் என்னவோ 'பலாத்காரத்தில்' நம்பிக்கையற்ற, 'அகிம்ஸா மூர்த்திகள்' என்று நினைத்துக்கொண்டு.

அதுபோலவே கருப்பையா பாரதி கொலை வழக்கு விசாரணையில் இருக்கும்போது, அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதுபோலவும், காங்கிரஸாரும் கழகத்தாரும் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு அமைதி நிலையைக் கெடுக்கிறார்கள் என்றும் அறிக்கை விட்டார்கள் கம்யூனிஸ்ட்டுகள், தாங்கள் என்னவோ பரம்பரை 'ஒழுக்க சீலர்கள்' என்று எண்ணிக்கொண்டு.

கழகத்திடம் இல்லாத பண்பைக் கழகத்துக்கு ஏற்றினார்கள்; தங்களிடம் இருக்கும் பண்பை மறைத்தார்கள்; இப்படிப்பட்ட அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டு, அதே நிலையில் கழகத்திடம் வஞ்சக உறவை வைத்துக்கொள்ள முனையவும் செய்கின்றனர். கம்யூனிஸ்ட்டுகளைப் பற்றி இப்படிப்பட்ட அறிக்கைகள் வெளியிட எவ்வளவோ வாய்ப்புகள் இருந்தும், கழகம் ஒருபோதும் செய்ய முனையவில்லை, கம்யூனிஸ்ட்டுக் கட்சி இடதுசாரிக் கட்சி என்ற காரணத்தால்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கழகம் எப்படிக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியோடு நட்புறவு வைத்துக்கொள்ள இயலும் என்பதை நடுநிலையாளர்கள் உணரவேண்டும். நேசக்கரத்தைக் கழகம் நீட்டினாலும், கம்யூனிஸ்ட்டுக் கட்சி வஞ்சகக் கரத்தையே நீட்ட எப்பொழுதும் முனைகிறது.

கம்யூனிஸ்ட்டுக் கட்சி கழகத்துக்கு எதிர்க் கட்சியாகவும், பகைக் கட்சியாகவுமே எப்பொழுதும் இருக்க விரும்புகிறது என்பதை அண்மையில் காட்டிவிட்டது. கம்யூனிஸ்ட்டுகள், தாங்கள் யார் என்பதைக் கழகத் தோழர்கள் நன்கு புரிந்துகொள்ளும் அளவுக்குத்தெளிவுபடுத்திவிட்டார்கள். கம்யூனிஸ்ட்டுகள் கழகத்தின் எதிரிகளாக இருந்து, கழகக் கருத்தோடு மோத வருதலையே விரும்புகிறார்கள் என்பதைக் காட்டிவிட்டார்கள். இராஜ்ய புனரமைப்புக்குழு அண்மையில் சென்னை வந்திருந்தபோது, கம்யூனிஸ்ட்டுக் கட்சி அதனிடம் கொடுத்த விண்ணப்ப அறிக்கையில், கழகக் கருத்துக்குத், தான் எதிரி என்பதை நிலைநாட்டிக்கொண்டுவிட்டது. கழகக் கருத்துக்குத், தான் எதிரி, என்பதை அவ்வறிக்கையின் மூலம் காட்டிக்கொள்ளும் பகுதி வருமாறு :—

"சீர்குலைவும் மக்கள் நலனுக்குப் பாதகமும் விளைவிக்கக் கூடியது திராவிடஸ்தான் கோரிக்கை. இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் எந்தப் பிரதேசம் கோரப்படுகிறது என்பதைப்பற்றித் தெளிவில்லை ஆனால் தமிழ்மொழியல்லாத திட்டவட்டமான வேறுமொழி பேசும் மக்கள் வசிக்கும் எந்தப் பிரதேசத்தைக் கோரினாலும் சரி அதற்கு நியாயமென்பதே இல்லை. அப்படிப்பட்ட ராஜ்யம் தனியான ராஜ்யமாக இருக்கவேண்டுமென்று கோருவதை நாங்கள் எதிர்க்கிறோம். அல்லது தென்னாட்டிலுள்ள சில ராஜ்யங்கள் கூட்டாகச் சேர்ந்து வட இந்தியாவிலிருந்து பிரிந்து தனித்திருக்கவேண்டுமென்று கோருவதையும் நாங்கள் எதிர்க்கிறோம். அவ்விதக் கோரிக்கைகள் இந்தியாவில் வாழும் சகோதர மக்களிடையே விரோதத்தைத்தான் வளர்க்கும் சகோதர உறவுகள் வளர்வதைச் சீர்குலைக்கும் இந்தியாவில் வாழும் மக்களிடையே

உண்மையான ஒற்றுமையும் கூட்டுறவும் வளர்வதைத் தடுக்கும். ஜனநாயக வாழ்வு மலர்வதற்கே அவை குந்தகம் விளைவிக்கும்.

இந்திய யூனியனுக்குள் இயங்கும் தமிழ் ராஜ்யந்தான் எங்களது கோரிக்கை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம் ''

இராஜ்யப் புனரமைப்புக் குழுவிடம், முன்னேற்றக் கழகம் தன்னுடைய அறிக்கையைக் கொடுக்கும்போது, தன்னுடைய கோரிக்கை இன்னது என்பதைத்தான் அதில் தெளிவுபடுத்தி இருந்ததே யொழிய, பேச்சுச் சுதந்தரம்—எழுத்துச் சுதந்தரமற்ற கொடுங்கோல் வல்லரசு ஆட்சியை நிறுவவே இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் இந்திய யூனியனை ஏக இந்தியாவாகக் கொள்ள நினைக்கின்றனர், அதை எதிர்க்கிறோம் என்ற முறையில் எடுத்துக்கூறவில்லை. அந்த அளவுக்குப் பிற கட்சிக் கருத்துக்கு விளக்கம் கொடுத்துப், பகையுணர்ச்சியைக் காட்டிக்கொள்ளும் பண்பை, முன்னேற்றக் கழகம் கொள்ளவில்லை. ஆனால், கம்யூனிஸ்ட்டுக்கட்சி, ''தென்னாட்டிலுள்ள சில ராஜ்யங்கள் கூட்டாகச் சேர்ந்து வட இந்தியாவிலிருந்து பிரிந்து தனித்திருக்கவேண்டுமென்று கோருவதையும் நாங்கள் எதிர்க்கிறோம்'' என்று கழகத்தின் கொள்கையிடத்துக் கொண்டுள்ள பகையுணர்ச்சியைத் தெள்ளத் தெளியக் காட்டியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய இலட்சியங்களுள் முதன்மையான இலட்சியமாக விளங்கும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையையே எதிர்க்கும் கம்யூனிஸ்ட்டுக் கட்சியுடன் கழகம் எங்ஙனம் நீடித்த நட்பையும், உறவையும் கொள்ளமுடியும் என்பதை நடுநிலை முற்போக்காளர்கள் உணரவேண்டும்.

மொழிவழி மாநிலங்களாகப் பிரியும் தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கும் இந்திய யூனியன் ஆட்சியின் கீழே இருக்கும்போது ஏற்படும் சீர், திராவிடக் கூட்டாட்சியில் அவை அமையும்போது, எப்படிக் குலைந்துவிடும் என்பதற்கான விளக்கங்களைக் கம்யூனிஸ்ட்டுகள் எங்கணும் தெளிவுபடுத்தவே யில்லை; இந்திய யூனியன் ஆட்சியின் கீழ் இருக்கும்போது ஏற்பட்டுள்ள சீர்குலைவுகள், எப்படியெல்லாம் திராவிடக் கூட்டாட்சியில் சீர்படும் என்று நாம் கூறும் காரணங்களை அவர்களால் மறுக்க முடிந்ததேயில்லை. உலகிலே இன்று நிலவும் பல சின்னஞ்சிறு நாடுகளைவிட திராவிடநாடு எந்த வகையிலே சொத்தை சோடை, எந்த விதத்திலே தனித்தியங்க முடியாது, எந்த வழியிலே வாழமுடியாது என்பதற்கான காரண காரிய விளக்கங்களைக் கூற வேண்டாமா. இந்த 'அகில உலகக் கண்ணோட்ட ரீதிக்காரர்கள்?' காரண காரிய விளக்கங் காட்டாமல், திராவிடஸ்தான் கோரிக்கை சீர்குலைவும், பாதகமும் ஏற்படுத்தக்கூடியது என்று கூறிவிட்டால் போதுமா? அது வேண்டுமானால் கம்யூனிஸ்ட்டுகளின் மனவிருப்பத்தைக் காட்டுவதாகுமே யொழிய, உண்மை நிலையை உரைத்ததாகாது?

''எந்தப் பிரதேசம் கோரப்படுகிறது என்பதைப் பற்றித் தெளிவில்லை'' என்று கம்யூனிஸ்ட் அறிக்கை கூறுகிறது. தெளிவு, திராவிட முன்னேற்றக் கழகக் கோரிக்கையில் தேவையான அளவுக்கு இருக்கிறது; ஆனால் அதனைப் புரிந்துகொள்ளும் அளவுக்குத் தெளிவு கம்யூனிஸ்ட்டுகளிடத்திலே இல்லை என்பது மட்டும் மேற்கண்ட அறிக்கையால் தெளிவுபடுகிறது. சேர்ந்தாற்போல் தமிழ் வழங்கும் தமிழகமும்—தெலுங்கு வழங்கும் ஆந்திரமும்—கன்னடம் வழங்கும் கருநாடகமும்—மலையாளம் வழங்கும் கேரளமும் ஒன்றுசேர்ந்த நிலப்பரப்புதான் திராவிடநாடு என்று பல்லாயிரந்தடவைகள் கூறியாகிவிட்டது; ஆனால், இன்னமும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு மட்டுமே தெளிவாகவில்லை. கோளாறு கோரிக்கையிலே இல்லை, கம்யூனிஸ்ட்டுக்களின் உள்ளத்திலே என்பதை இனியேனும் அவர்கள் உணர்வார்களாக!

'' தமிழ் மொழியல்லாத திட்டவட்டமான வேறு மொழி பேசும் மக்கள் வசிக்கும் எந்தப் பிரதேசத்தைக் கோரினாலும் சரி, அதற்கு நியாயமென்பதே இல்லை. அப்படிப்பட்ட ராஜ்யம் தனியான ராஜ்யமாக இருக்கவேண்டுமென்று கோருவதை நாங்கள் எதிர்க்கிறோம்'' என்ற கம்யூனிஸ்ட்டு அறிக்கையின் கூற்றுக்கும் திராவிட முன்னேற்றக் கழகக்கொள்கைக்கும் தொடர்பே இல்லை. கம்யூனிஸ்ட்டுக்கள் வேறு யாரையோ மனதில் நினைத்துக்கொண்டு அவ்வாறு கூறியிருக்கின்றனர் என்று நாம் கருதுகிறோம் இல்லை, முன்னேற்றக் கழகக் கொள்கையைப் பொறுத்துதான் அப்படிக் கூறுகிறார்கள் என்றால், கம்யூனிஸ்ட்டுக்கள்,

அறிவுத்தெளிவு ஏற்படும்போது, மீண்டும் ஒரு முறை படித்துப்பார்ப்பார்களேயானால், முன்னேற்றக்கழகம் அப்படி ஒரு கோரிக்கையைக் கோரவில்லை என்பது தெளிவுபடும்.

திராவிட நாடு தனியே பிரிவது, "இந்தியாவில் வாழும் சகோதர மக்களிடையே விரோதத்தைத்தான் வளர்க்கும், சகோதர உறவுகள் வளர்வதைக் கெடுக்கும். இந்தியாவில் வாழும் மக்களிடையே உண்மையான ஒற்றுமையும் கூட்டுறவும் வளர்வதைத் தடுக்கும்" என்னும் கருத்துப்பட கம்யூனிஸ்ட்டு அறிக்கை கூறுகிறது.

பல்வேறு நாடுகளாகப் பிரிந்து கிடக்கும் ஐரோப்பாவில் நிலவும் சகோதர வாழ்வை விடப், பல்வேறு நாடுகள் சேர்ந்து இருக்கும் இந்தியாவில் எந்தவிதமான அதிகப்படி சகோதர வாழ்வைக் கண்டு களித்து, ஏற்றத்துக்கு அதனைக் காரணமாக்கிவிட்டார்களோ?—தெரியவில்லை! இந்தியா, பாக்கிஸ்தான், பர்மா, மலேயா, இலங்கை, இந்தோனேஷியா, இந்தோசீனா, சீனா, ஜப்பான் போன்ற பலநாடுகள் பிரிந்திருப்பது ஆசியாவின் சகோதர வாழ்வைக் கெடுத்துவிட்டதா? திராவிடப் பிரிவினையை எதிர்க்கும் வீராதி வீரர்கள் பாக்கிஸ்தான் பிரிவினையையும் எதிர்த்து இந்தியச் சகோதர வாழ்வைக் காப்பாற்றினார்களா? அந்தப் பிரிவினையால் கெடாத சகோதர வாழ்வு திராவிடப் பிரிவினையால் மட்டும் கெட்டுப்போய்விடுமா? பாக்கிஸ்தான் பிரிவினைக்கான காரணங்களைவிட எந்தவகையிலே திராவிடப் பிரிவினைக்கான காரணங்கள் சொத்தை சோடையாக இருக்கின்றன? இரண்டு வெவ்வேறு துண்டுகளாகக் கேட்ட பாக்கிஸ்தான் பிரிவினைக்குக் கம்யூனிஸ்ட்டு கட்சியின் இறுதி ஆதரவு; ஒரே துண்டாகக் கேட்கும் திராவிட நாடு பிரிவினைக்கு எதிர்ப்பா? என்னே வியப்புக்குரிய கொள்கை—வியப்புக்குரிய கட்சி—வியப்புக்குரிய கம்யூனிஸ்ட்டுகள்? எந்தவித 'உண்மையான ஒற்றுமையும் கூட்டுறவும்' இந்தியாவில் வாழும் மக்களிடையே நிலவுகின்றன? உண்மையான ஒற்றுமையும், கூட்டுறவும் இந்தியா வாழ்மக்களிடையே இல்லை - இருக்கமுடியாது-இருக்கும்படியான சூழ்நிலை வளரவில்லை-நாளுக்குநாள் தேய்கிறது என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது. எனவேதான் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கோருகிறது.

வடநாட்டுக் கம்யூனிஸ்ட்டுத் தலைவர்களுக்குக் கட்டுப்பட்ட தென்னாட்டுக் கம்யூனிஸ்ட்டுக்காரர்கள் திராவிடநாடு பிரிவினையை எதிர்க்கச் செய்வதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? எனவே பரிதாபத்திற்குரிய அவர்களிடம் நாம் காரண காரிய விளக்கம் எப்படிப் பெற முடியும்?

"ஜனநாயக வாழ்வு மலர்வதற்கே" பிரிவினை கோரிக்கை குந்தகம் விளைவிக்கும் என்று கம்யூனிஸ்ட்டு அறிக்கை ஓலமிடுகிறது. ஜனநாயக வாழ்வுக்கும் எல்லை—நிலப்பரப்பு—மக்கள் எண்ணிக்கை ஆகியவற்றிற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்று அகில உலகரீதிக்காரர்களைக் கேட்கிறோம்? இந்தியா போன்ற பரந்த நிலப்பரப்பில்தான் ஜனநாயகம் தழைக்கும், திராவிடம் போன்ற நிலப்பரப்பில் ஜனநாயகம் தழைக்காது என்பது கம்யூனிஸ்ட்டுகள் எண்ணமா? இந்தியாவில் நிலவும் ஜனநாயக வாழ்வைவிட, திராவிடத்திற்கும் சிறியனவாக உலகில் நிலவும் அண்டோரா, மொனாக்கோ, ஸ்விட்ஜர்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன், செகோஸ்லேவேக்கியா, யூகோஸ்லேவியா, இலங்கை, இந்தோனேஷியா போன்ற 90 நாடுகளில் ஜனநாயக வாழ்வு சீர் குன்றித் தத்தளித்துக்கொண்டா இருக்கிறது. உலகின் சின்னஞ்சிறு நாடுகளிலெல்லாம் நிலவும் ஜனநாயக வாழ்வு, திராவிடத்தில் மட்டும் எப்படி நிலவா மற்போய்விடும்? என்னே கம்யூனிஸ்டுகளின் விளக்கம்! இது சிறுவர் வாயினும் சிரிப்பை விளைவிக்குமே!

"இந்திய யூனியனுக்குள் இலங்கும் தமிழ் ராஜ்யந்தான் எங்களது கோரிக்கை" என்று தமிழ்நாடு கம்யூனிஸ்ட்டு கட்சிக் கிளை அறிக்கையில் தெள்ளத் தெளிய கூறிவிட்டது. "தமிழ் ராஜ்யத்தைத் திராவிட நாட்டுக்குள் இலங்கச்செய்யவேண்டுமென்பதே" திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய குறிக்கோள்.

கழகத்தின் முக்கிய குறிக்கோளை இழித்தும் பழித்தும் பேசவும், இறுதிவரையில் எதிர்த்து நிற்கவும் துணிந்துவிட்ட கம்யூனிஸ்ட்டுகளுடன் நட்பும் உறவும் அவ்வளவு எளிதில் எப்படி ஏற்பட்டுவிட முடியும் என்பதைத்தான் நடுநிலையாளர்களைச் சிந்திக்கச் சொல்கிறோம்.

காலரும், சயிட் ஒப்பனும் உள்ள பிளவுஸ்

அளவுகள்

மார்பு சுற்று அளவு 32 அங்.
இடுப்புவரை முதுகு நீளம் 14 ,,
முழு நீளம் 18 ,,
பாதித்தோள் 6 ,,
கழுத்து-தலை சுற்று அளவு + 2 அங்.—20 அங்.

பின்பக்கத்தின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை 18½ அங்.
(முழு நீளம் + ½ அங்.)
2-ல் இருந்து 0 வரை 14¼ அங்.
(இடுப்புவரை முதுகு நீளம் + ¼ அங்.)
3-ல் இருந்து 0 வரை 6½ ,,
(¼ மார்பளவில் 1½ அங். குறைவு)
4-ல் இருந்து 0 வரை 6¼ அங்.
(பாதித்தோள் + ¼ அங்.)
5-ல் இருந்து 0 வரை 2½ அங்.
6-ல் இருந்து 4 வரை ½ ,,
7-ல் இருந்து 0 வரை 1 ,,
8-ல் இருந்து 4 வரை நேர்கோடு இணைக்க.
9-ல் இருந்து 8 வரை 2¼ ,,
10-ல் இருந்து 3 வரை 9 ,,
(¼ மார்பு + 1 அங்.)
11-ல் இருந்து 1 வரை 9 ,,
12-ல் இருந்து 11 வரை 5½ அங்.

முன்பக்கத்தின் விளக்கம்

13-ல் இருந்து 14 வரை 6½ அங்.
(¼ மார்பளவில் 1½ அங். குறைவு)
14-ல் இருந்து 10 வரை 9½ அங்.
(¼ மார்பளவு + 1½ அங்.)
15-ல் இருந்து 13 வரை 14¼ ,,
16-ல் இருந்து 13 வரை 18½ ,,
17-ல் இருந்து 16 வரை 9½ ,,
18-ல் இருந்து 13 வரை 3 அங்.
19-ல் இருந்து 13 வரை 6¾ ,,
20-ல் இருந்து 19 வரை ½ ,,
21-ல் இருந்து 19 வரை நேர்கோடு இணை.
22-ல் இருந்து 21 வரை 2½ ,,
23-ல் இருந்து 13 வரை 5½ அங்.
K-ல் இருந்து 16 வரை ½ ,,

பின்பக்கம் காலர் விளக்கம்

B-ல் இருந்து 5 வரை 2 அங்.
(A, B இணைப்பு)
A-ல் இருந்து 7 வரை 2 ,,
(7, 5 இணைப்பு)

முன்பக்கம் காலர் விளக்கம்

B-ல் இருந்து 18 வரை 2 அங்.
(18, 23 இணைப்பு)
A-ல் இருந்து 23 வரை 3 ,,
(A, B இணைப்பு)

சயிட் ஒப்பன் 12, 11, 17 எண்கள் உள்ள இடத்தில் புள்ளிகள் வைத்துள்ள இடத்தில் ½ அங். துணி மடிப்புக்கு வைத்து வெட்டிக் கொள்ளவும். 5½ அங். ஒப்பன் அமைத்து பட்டன் கட்டவும்.

முன்பக்கம், பின்பக்கம் வெட்டி எடுத்துக் கொண்டு அதை துணியின்மீது போட்டு காலர் அளவுப்படி படத்தில் உள்ள வளைவுக்கு ஏற்றார்போல் வெட்டி எடுத்துக்கொள்ளவும். காலர் தைத்து திருப்பி ஆடுப்படியும் தைக்கலாம் அல்லது காலர் ஓரத்தில் பயிப்பிங் வைத்து பாடியில் படியும்படியும் தைக்கலாம்.

1, 11 எண்ணுக்கு மத்தியில் ¾ அங். அகலம் 7 அங். நீளம், பின்பக்கம் இரண்டு டார்ட்டு அமைக்கவும்.

17, 16 எண்ணுக்கு மத்தியில் ¾ அங். அகலம். 7 அங்குலம் நீளம் முன்பக்கம் இரண்டு டார்ட்டு அமைக்கவும்.

விளக்கப்படத்தின் வடிவம்போன்று அமைந்துள்ளனவா என்று ஒத்திட்டுப்பார்த்து வெட்டவும்.